Find us on facebook/tamilmirror | Follow us on tamilmirror | epaper/tamilmirror.lk

# தமிழ் Mirror

www.tamilmirror.lk

MONDAY, NOVEMBER 11, 2024

திங்கட்கிழமை,11 நவம்பர் 2024 | ஒளி: 10 கதிர்: 090 | பக்கம்:08 | நகரப்பதிப்பு | FREE

## துப்பாக்கி சூட்டில் தம்பதி பலி

காலி வீதி, அம்பலாங்கொடை - உரவத்த பிரதேசத்தில், ஞாயிற்றுக்கிழமை (10) பிற்பகல் இடம்பெற்ற துப்பாக்கிச் சூட்டில், கணவன் மனைவி இருவரும் உயிரிழந்துள்ளதாக, அம்பலாங்கொடை பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

தொடர்ச்சி P2



### குழந்தையை தூக்கிவீசி, தம்பத்தியை தாக்கி

# சுன்னாகம் பொலிஸார் அட்டகாசம்

### அலுவலகம் திறந்த சில மணி நேரத்திலேயே ரகளை



■ நிதர்ஷன் வினோத்

பச்சிளம் குழந்தையை தூக்கி வீசி , இளம் தாயார் மீதும் அவரது கணவர் உள்ளிட்டவர்கள் மீதும் சுன்னாகம் பொலிஸார் மூர்க்கத்தனமான தாக்குதல் நடத்தியுள்ளதாக பாதிக்கப்பட்ட பெண் குற்றம் சாட்டியுள்ளார்.

யாழ்ப்பாணம் சுன்னாகம் பகுதியில் தமது வாகனத்தில் குடும்பத்தினர் சனிக்கிழமை (09) இரவு பயணித்துக் கொண்டிருந்த வேளை , அவர்களது வாகனத்தை மோட்டார் சைக்கிளில் முந்தி சென்றவர்கள் வாகனத்திற்கு முன்பாக தடுமாறி விழுந்து விபத்துக்கு உள்ளாகியுள்ளனர்.

சம்பவம் தொடர்பில் பாதிக்கப்பட்டவரின் மனைவி தெரிவிக்கையில்,

நாங்கள் வாகனத்தில் பயணித்து கொண்டிருந்த வேளை , மோட்டார் சைக்கிளில் பயணித்த இருவர் எம்மை முந்தி சென்று விபத்துக்கு உள்ளானர்கள். அவர்கள் மது போதையில் இருந்தமையால் , நாங்களும் வாகனத்தை நிறுத்தி விட்டு , இருந்தோம்.

அப்போது சிவில் உடையில் வந்தவர்கள் எனது கணவரிடம் சாரதி அனுமதி பத்திரம் , வாகன ஆவணங்களை கேட்டிருந்தனர். சிவில் உடையில் உள்ள உங்களுக்கு அதை காண்பிக்க தேவையில்லை. விபத்து நடந்துள்ள இடத்திற்கு போக்குவரத்து பிரிவு பொலிஸாரை வரவழையுங்கள் என என் கணவர் கூறினார்.

அதற்கு சிவில் உடையில் வந்திருந்தவர்கள் எனது கணவனை மூர்க்க தனமாக தாக்கினார்கள். அதை தடுக்க சென்ற என்னையும் தாக்கி , எனது இரண்டு மாத குழந்தையையும் , என் கையில் இருந்து பிடுங்கி எறிந்தனர்.

தொடர்ச்சி P2

> “ சிவில் உடையில் வந்தவர்கள் எனது கணவரிடம் சாரதி அனுமதி பத்திரம், வாகன ஆவணங்களை கேட்டிருந்தனர். சிவில் உடையில் உள்ள உங்களுக்கு அதை காண்பிக்க தேவையில்லை. விபத்து நடந்துள்ள இடத்திற்கு போக்குவரத்து பிரிவு பொலிஸாரை வரவழையுங்கள் என என் கணவர் கூறினார்

## “அரசியல் கைதிகளை விடுவிப்போம்”

### வவுனியாவில் ஜனாதிபதி அனுரகுமார வாக்குறுதி



■ க. அகரன்

சட்டமா அதிபரின் ஆலோசனைக்கு அமைய அரசியல் கைதிகளை விடுவிப்பதுடன், மக்களின் காணிகளை விரைவில் விடுவிப்போம் என ஜனாதிபதி அனுரகுமார திசாநாயக்க தெரிவித்தார்.

தேசிய மக்கள் சக்தியின் பாராளுமன்றத் தேர்தலுக்கான பிரச்சார கூட்டம் வவுனியா நகரசபை விளையாட்டு மைதானத்தில் ஞாயிற்றுக்கிழமை (10) மாலை இடம்பெற்றது. அதில், உரையாற்றும் போதே மேற்கண்டவாறு தெரிவித்தார்.

தொடர்ச்சி P2



## இந்திய நீர்மூழ்கிக் கப்பல்



இந்திய கடற்படையின் நீர்மூழ்கிக் கப்பல் ஐஎன்எஸ் வேலா மூன்று நாள் பயணமாக கொழும்பு துறைமுகத்தை ஞாயிற்றுக்கிழமை (10) வந்தடைந்தது. நீர்மூழ்கி கப்பலுக்கு இலங்கை கடற்படையின் காவலர் மற்றும் இசைக்குழுவின் அதிகாரியினால் சம்பிரதாய வரவேற்பு அளிக்கப்பட்டது. ஐஎன்எஸ் வேலா என்பது உள்நாட்டு கல்வாரி வகை டீசல்-மின்சார நீர்மூழ்கிக் கப்பலாகும், இது 2021நவம்பர் 25 அன்று இந்திய கடற்படையில் இணைக்கப்பட்டது.

## “உடன் நடவடிக்கை எடுக்கவும்”

யாழ்ப்பாணம் சுன்னாகம் பொலிஸாரால் இளந்தாயொருவரும், அவரது பச்சிளம் குழந்தையும் கணவனும், சனிக்கிழமை (09) இரவு தாக்கப்பட்டதாக குறிப்பிடப்படும் சம்பவம் தொடர்பில் கவலையடைந்துள்ள ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் வேட்பாளர் கீதநாத் காசிலிங்கம் இந்த சம்பவம் தொடர்பில் முழுமையான விசாரணை நடத்தப்பட்டு தாக்குதல் நடத்தியோர் மீது உரிய சட்ட நடவடிக்கை எடுப்பதுடன், பாதிக்கப்பட்ட தரப்பிற்கு நீதி கிடைக்க சம்பந்தப்பட்ட அதிகாரிகளிடம் நடவடிக்கை எடுக்கவேண்டும் என்றும் வலியுறுத்தியுள்ளார்.



தொடர்ச்சி P2

## செவ்வாய் நள்ளிரவுடன் தேர்தல் பிரசாரம் நிறைவு

நவம்பர் 14ஆம் திகதியன்று நடைபெற இருக்கும் பாராளுமன்றத் தேர்தல் தொடர்பான அனைத்து பிரசார நடவடிக்கைகள் செவ்வாய்க்கிழமை (11) நள்ளிரவுடன் நிறைவடையும் என தேர்தல்கள் ஆணைக்குழு அறிவித்துள்ளது.

இதனிடையே, தேர்தல் அலுவலகங்களை அகற்றுவதற்கு புதன்கிழமை (12) நள்ளிரவு வரை அவகாசம் வழங்கப்பட்டுள்ளதாக தேர்தல்கள் ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

தொடர்ச்சி P2




## “சிலிண்டர்களை அனுப்பாவிடின்; முட்டைகளின் விலை கூடும்”

■ எஸ். சதீஸ்


எதிர்வரும் 14ம் திகதி பாராளுமன்ற தேர்தலில் நுவரெலியா மாவட்டத்தில் ஐக்கிய தேசிய கட்சியின் சார்பாக யானை சின்னத்திலும் சிலிண்டர் சின்னத்திலும் போட்டியிடும் வேட்பாளர்களை பாராளுமன்றத்திற்கு அனுப்பவிட்டால் முட்டையின் விலை ஆயிரம் ரூபாவாக அதிகரிக்குமென ஐக்கிய தேசிய கட்சியின் தலைவரும் முன்னாள் ஜனாதிபதியுமான ரணில் விக்ரமசிங்க தெரிவித்தார் பாராளுமன்ற தேர்தலில் ஐக்கிய தேசிய கட்சியின் சார்பில் போட்டியிடும் வேட்பாளர்களுக்கு ஆதரவு

தொடர்ச்சி P2



## பாதுகாப்பு பணியில் 90,000 பேர்

இம்முறை பொதுத் தேர்தலின் பாதுகாப்பிற்காக 90,000 பாதுகாப்பு பணியாளர்கள் ஈடுபடுத்தப்பட்டுள்ளதாக பொலிஸ் ஊடகப் பேச்சாளர் பிரதிப் பொலிஸ் மா அதிபர் நிஹால் தல்துவ தெரிவித்துள்ளார்.



தொடர்ச்சி P2

## “14க்குப் பின்னரே எமது போராட்டம்”



டிஜிட்டல் தொழில்நுட்பத்தின் ஊடாக அனைத்து தொகுதிகளிலும் ஒரே நேரத்தில் சனிக்கிழமை (09) உரையாற்றிய முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, நவம்பர் 14 ஆம் திகதிக்கு பின்னர் தமது போராட்டம் ஆரம்பமாகும் என்றார்.

தாம் எழுப்பும் உண்மையான பொருளாதார பிரச்சனைகளை

தொடர்ச்சி P2

## “திரிபோஷவை மூடுவதற்கு சதி”

தாம் பாட்டாளி சாதாரண மக்கள் வர்க்கத்தை பிரதிநிதித்துவபடுத்துவதாகும், சாதாரண மக்களின் துன்பங்களை அறிவதாகும் கூறிய ஜனாதிபதி அனுரகுமார திஸாநாயக்க,

தொடர்ச்சி P2



PAGE 1 தொடர்ச்சிகள்

# சுன்னாகம் பொலிஸார் அட்டகாசம்

பின்னர் சீருடையில் வந்த பொலிஸார் வாகனத்தை பொலிஸ் நிலையம் எடுத்து சென்றதுடன் எனது கணவரையும் கைது செய்துள்ளனர் என தெரிவித்தார்.

அதேவேளை சம்பவ இடத்திற்கு சென்ற சட்டத்தரணி மணிவண்ணன், பார்த்தீபன் உள்ளிட்டோர், பாதிக்கப்பட்ட தரப்பினருக்கு ஆதரவாக நின்றிருந்தனர்.

பொலிஸ் நிலையத்தினுள் சென்ற சட்டத்தரணி மணிவண்ணன், கைது செய்யப்பட்டிருந்த வரை பார்வையிட்டு, சம்பவம் தொடர்பில் நேரில் கேட்டறிந்து கொண்டார்.

அது தொடர்பில் ஊடகங்களுக்கு சட்டத்தரணி மணிவண்ணன் கருத்து தெரிவிக்கையில்,

மது போதையில் பொலிஸார் அராஜகம் செய்வது பாரதூரமான அடிப்படை மனித உரிமை மீறல் இந்த குற்றச் செயலை செய்த பொலிஸ் உத்தியோகத்தர்கள் அனைவரும் நீதியின் முன் நிறுத்தப்பட வேண்டும்.

இது தொடர்பில் பாதிக்கப்பட்டவர்கள் நலன் சார்ந்து செயல்பட சட்டத்தரணிகள் ஆகிய நாங்கள் தயாராக இருக்கிறோம்.

பொலிஸ் தடுப்புக் காவலில் தடுத்து வைக்கப்பட்டிருந்தவர்களை நேரில் பார்வையிட்டு, கேட்ட போது, தம்மை பொலிஸ் நிலையத்தில் வைத்தும் பொலிஸார் கடுமையாக தாக்கியுள்ளதாக தெரிவித்துள்ளனர்.

இது தொடர்பில் நீதிமன்றத்தின் கவனத்திற்கு கொண்டு செல்ல உள்ளோம். இந்த சம்பவம் தொடர்பான அனைத்து நடவடிக்கைகளையும் சட்ட ரீதியாக முன்னெடுக்க நாங்கள் தயாராக உள்ளோம் என தெரிவித்தார்.

அதேவேளை பாதிக்கப்பட்ட தரப்பினருக்கு



ஆதரவாக பொலிஸ் நிலையம் முன்பாக நின்ற மக்களை பொலிஸ் நிலையம் முன்பாக இருந்து கலைந்து செல்லுமாறு பொலிஸார் பணித்து, மக்களை அங்கிருந்து விரட்ட முனைந்தனர்.

அதன் போது அங்கிருந்த யாழ். மாநகர சபை முன்னாள் உறுப்பினர் வ.பார்த்தீபன் பொலிஸாரிடம் நியாயம் கேட்க முற்பட்ட வேளை, அவரை போதையில் நின்று குழப்பம் விளைவிப்பதாக கூறி பொலிஸார் தாக்க முற்பட்டுள்ளனர்.

பச்சிளம் குழந்தையை தூக்கி வீசி அராஜகமாக நடந்து கொண்ட பொலிஸாருக்கு எதிராக நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும் என கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

சுன்னாகம் பொலிஸ் நிலையத்தின் புதிய அலுவலகமான இலங்கை பதில் பொலிஸ் மா அதிபர் பிரியந்த வீரசூரியவினால் சனிக்கிழமை (09) திறந்து வைக்கப்பட்டு சில மணி நேரங்களில் இந்த சம்பவம் இடம்பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# பாதுகாப்பு பணியில் இம்முறை 90,000 பேர்

இக்குழுவில் 63,145 பொலிஸ் அதிகாரிகள், 3,200 விசேட அதிரடிப்படை அதிகாரிகள், தேவைக்கு ஏற்ப பொலிஸ் அதிகாரிகள் பாதுகாப்புக்காக பயன்படுத்தப்படுவர். 11,000 இராணுவத்தினர் மற்றும் நடமாடும் பாதுகாப்பு சேவை உள்ளிட்ட பாதுகாப்பு சேவைகளுக்காக 12,227 சிவில் பாதுகாப்பு உத்தியோகத்தர்கள் உள்ளடங்குவதாக நிஹால் தல்துவ தெரிவித்தார்.

தேர்தலுக்குப் பிந்தைய பாதுகாப்பிற்காக நாடளாவிய ரீதியில் 3,109 நடமாடும் ரோந்து படையினரும் 269 வீதித் தடைகளும் 241 கலவர எதிர்ப்புக் குழுக்களும் ஈடுபடுத்தப்பட்ட உள்ளதாகவும் அவர் கூறினார்.

# "சிலிண்டர்களை அனுப்பாவிடின் முட்டைகளின் விலை கூடும்"

தெரிவிக்கும் வகையில் கொட்டக்கலை சி.எல்.எப்பில் ஞாயிற்றுக்கிழமை (10) இடம் தேர்தல் பிரச்சார கூட்டத்தில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இந்த நாட்டு மக்கள், ஜனாதிபதித் தேர்தலில், அநுரகுமார திசாநாயக்கவை தெரிவு செய்தனர் ஜனாதிபதியாக பதவியேற்றவுடன் பாராளுமன்றத்தை கலைத்தார். எதற்காக பாராளுமன்றத்தை கலைத்தார். அவருடைய வேலைத்திட்டம் என்னவென்று கூற வேண்டும். என்னிடம் 16குடைகள் இருந்தன. அதனை கூட எனது பாதுகாவலர்கள் தான் பிடிக்கின்றனர்.

பாராளுமன்றத்தை சுத்தசெய்வதற்கு வாக்களிக்குமாறு கூறுகின்றனர். தேசிய மக்கள் சக்தியில் வேட்பாளர்களின் பெயர்கள் கூட தெரியாது.

எமது கட்சியிலும், புதிய ஜனநாயக முன்னணியிலும் மக்களுக்கு தெரிந்த வேட்பாளர்களை நிறுத்தியுள்ளோம். அனைத்து கட்சிகளிலும் தெரியாத வேட்பாளர்களே உள்ளனர்.

பாராளுமன்றத்தில் உள்ள திருடர்களுக்கு எதிராக நடவடிக்கை எடுப்பதற்காக, பிரேரணையை நாங்கள் கொண்டு வந்த போது தேசிய மக்கள் சக்தியினர் எதிராக வாக்களித்தனர். அந்த நேரம் திருடர்களை பிடிக்க அவர்களுக்கு விருப்பம் இல்லை. தற்போது திருடர்களை பிடிப்பதாக சத்தமிடுகின்றனர் என்றார்.

# செவ்வாய் நள்ளிரவுடன் தேர்தல் பிரசாரம் நிறைவு

இந்நிலையில், பொதுத் தேர்தல் காலத்தில் சமூக வலைத்தளங்களில் மேற்கொள்ளப்படும் பொய்ப் பிரசாரங்கள் தொடர்பில் விசாரணைகளை மேற்கொள்ள விசேட குழு நியமிக்கப்பட்டுள்ளது. தேர்தல் ஆணைக்குழுவால் நியமிக்கப்பட்டுள்ள இக்குழுவில் 5 அதிகாரிகள் அங்கம் வகிக்கின்றனர்.

பேஸ்புக், இன்ஸ்டாகிராம், டிக் டாக் போன்ற சமூக ஊடகங்கள் ஊடாக ஒரு கட்சி அல்லது வேட்பாளருக்கு எதிராக பதிவிடப்படும் தவறான பிரச்சாரங்கள் தொடர்பில் கண்காணிப்படவுள்ளது. பொய்ப் பிரசாரங்களை சமூக வலைத்தளங்களில் இருந்து நீக்கவும் நடவடிக்கை எடுக்கப்படும் என தேர்தல் ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

எவ்வாறாயினும், கடுமையான விளைவுகளை ஏற்படுத்தும் வகையிலான பதிவுகள் தொடர்பில் நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் ஆணைக்குழு எச்சரித்துள்ளது.

பொதுத் தேர்தல் கண்காணிப்பு நடவடிக்கையில் வெளிநாட்டு கண்காணிப்பாளர்கள் 50 பேர் ஈடுபடவுள்ளதாக தேர்தல் ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

ஐரோப்பிய ஒன்றியத்தின் தேர்தல் கண்காணிப்பாளர்கள் ஏற்கனவே இலங்கைக்கு வருகை தந்துள்ளதாக ஆணைக்குழுவின் தவிசாளர் ஆர்.எம்.ஏ.எல் ரத்நாயக்க தெரிவித்துள்ளார்.

> **இம்முறை பொதுத் தேர்தலில் அரச சொத்துக்களை முறையற்ற விதத்தில் பயன்படுத்தப்படுகின்றமை மிகக் குறைந்த மட்டத்தில் காணப்படுவதாக தேர்தல் கண்காணிப்பாளர்கள் தெரிவித்துள்ளனர்.**

ஆசிய தேர்தல் கண்காணிப்பு வலையமைப்பின் கண்காணிப்பாளர்களும் எதிர்வரும் நாட்களில் வருகைதரவுள்ளதாக தேர்தல் ஆணைக்குழு கூறியுள்ளது.

தேர்தல் ஆணைக்குழுவின் அழைப்பிற்கிணங்க மேலும் 08 நாடுகளின் தேர்தல் கண்காணிப்பாளர்களும் வருகை தரவுள்ளதாக தேர்தல் ஆணைக்குழுவின் தவிசாளர் குறிப்பிட்டார். சார்க் வலய நாடுகள் மற்றும் ரஷ்யாவை பிரதிநிதித்துவப்படுத்தி அவர்கள் இலங்கைக்கு வரவுள்ளனர்.

இதேவேளை, இம்முறை பொதுத் தேர்தலில் அரச சொத்துக்களை முறையற்ற விதத்தில் பயன்படுத்தப்படுகின்றமை மிகக் குறைந்த மட்டத்தில் காணப்படுவதாக தேர்தல் கண்காணிப்பாளர்கள் தெரிவித்துள்ளனர்.

# துப்பாக்கி சூட்டில் தம்பதி பலி

உயிரிழந்த இருவரும் அம்பலாங்கொடை - மாதம்பே, தேவகொட பிரதேசத்தை சேர்ந்தவர்கள் எனவும், பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இவர்கள் இருவரும் அம்பலாங்கொடையில் இருந்து மோட்டார் சைக்கிளில் பயணித்தபோது, இனந்தெரியாத ஆயுததாரிகள் மோட்டார் சைக்கிளில் வந்து அவர்கள் மீது துப்பாக்கி பிரயோகம் மேற்கொண்டுவிட்டு தப்பிச் சென்றுள்ளதாக, பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

# "உடன் நடவடிக்கை எடுக்கவும்"

இந்த சம்பவம் தொடர்பில் பலரும் ஆளும் அரசாங்கத்தை கண்டிப்பதை காண முடிகின்றது. ஒரு சில அதிகாரிகள் விடும் தவறுகளுக்கு அரசாங்கத்தை குறை கூறி பயனில்லை. இப்படியான சம்பவம் எமது பொதுஜன பெரமுன அரசாங்க காலத்திலும் இடம்பெற்றிருக்கின்றன. அதன்போது பிழை விடும் அதிகாரிகள் மீது சுமத்த வேண்டிய குற்றச்சாட்டுக்களை அரசாங்கத்தின் மீது சுமத்தினார்கள்.

சுன்னாகம் தாக்குதல் சம்பவத்தில் குற்றம் இழைத்தவர்கள் தண்டிக்கப்பட வேண்டும் என்பதில் எங்களுக்கு மாற்றுக்கருத்தில்லை. இது தொடர்பில் உரிய விசாரணை நடத்தி நீதியை நிலை நாட்ட வேண்டும் என்பது எங்கள் கோரிக்கையாக இருக்கின்றது என்றும் கீதநாத் காசிலிங்கம் குறிப்பிட்டுள்ளார்.

# "14க்குப் பின்னரே எமது போராட்டம்"

அரசியல் சேறு பூசி மறைக்க முயல வேண்டாம் என தெரிவித்த ரணில் விக்கிரமசிங்க, நாட்டுக்கு எதிர்காலம் வேண்டுமெனில் பாராளுமன்றத்திற்கு அனுபவம் வாய்ந்த அணியை நியமிக்குமாறு கோருவதாக தெரிவித்தார்.

இன்னும் சில நாட்களில் புதிய ஜனாதிபதியை நியமித்து பாராளுமன்றம் கலைக்கப்படும் போது

ஜனாதிபதி தேர்தலுக்கு முன்னர் ஐஎம்எப் உடன்படிக்கையை நிராகரித்த திசைகாட்டியே நாட்டுக்கு பொறுப்பு கூறவேண்டும். எனினும், பொருளாதாரம் தொடர்பாக ஆலோசிக்க இப்போது சர்வதேச நாணய நிதியத்தை திசைகாட்டி சந்தித்து வருகிறது.

மேலும், சர்வதேச நாணய நிதியத்தின் உடன்படிக்கை, அரசாங்கத்தின் கொள்கை, அரசாங்கத்தின் உரிய பார்வை மற்றும் வேலை திட்டம் குறித்து ஜனாதிபதி நாட்டிற்கு விளக்கமளிக்க வேண்டும். இதைப் பற்றி அறிக்கை விடுவதற்கு பதிலாக, பிறரைக் குற்றம் சாட்டுவது, அவதூறாக பேசுவதும்தான் ஜனாதிபதியின் கடமையாக உள்ளது என்று முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க மேலும் தெரிவித்தார்.

# "அரசியல் கைதிகளை விடுவிப்போம்"

முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க கடந்த தேர்தலில் பிரச்சாரத்திற்காக இந்த மாவட்டத்திற்கு வந்தார். வன்னி மக்கள் ஓரளவு வாக்கை அவருக்கு வழங்கியிருந்தனர். இந்த தேர்தலில் அவர் வருவாரா? அதேபோல எதிர்க்கட்சி தலைவர் சஜித் பிரேமதாச அவரும் வந்தார். இந்த தேர்தலுக்கு அவர் இங்கு வருவாரா? வரவில்லை. ஏன்? அவர்கள் அவர்களது வெற்றிக்காக மாத்திரமே தேர்தலில் நின்றார்கள்.

ஜனாதிபதித் தேர்தலில் வன்னியில் எனக்கு விழுந்த 21 ஆயிரமாகும். அந்த வாக்குகளும் எமது வெற்றிக்கு பாரிய ஒரு பங்களிப்பையும் சக்தியையும் வழங்கியிருந்தது.

வடக்கு மக்களுக்கு சொந்தமான காணிகள் பாதுகாப்பு அரசாங்கத்திடம் இருக்கிறது. இந்த காணிகள் அனைத்தையும் மீண்டும் அந்த மக்களுக்கு நாங்கள் வழங்குவோம்.

எங்களுக்குத் தெரியும். இங்கு யுத்தம் ஒன்று நடந்தது பல்வேறு அநீதிகளுக்கு முகம் கொடுத்தோம். இன்று அரசியல் கைதிகள் உள்ளனர். அவர்களை சட்டமா அதிபரின் ஆலோசனைகளுக்கு அமைய விரைவில் விடுதலை செய்வோம் என்றும் வாக்குறுதியளித்தார்.

இது சமத்துவமான ஒற்றுமையான ஆட்சி. இதை தென்பகுதி எதிர்க்காது. ஆனால், அன்று அப்படி அல்ல வடக்கில் இவ்வாறு ஒன்று நடந்தால் தென்பகுதி அதற்கு எதிராக இருந்தது. எங்களை பிரித்து அரசியல் செய்தார்கள். நாங்கள் இன்று அனைவரும் ஒன்றாக இருக்கிறோம் என்றார்..

வடக்கின் மீன்வளத்தை பெரிய அளவில் வேறு நாடுகள் வந்து சூறையாடுகிறன. எமது மீன் வளம் அழிவதற்காகவே இவ்வாறு செய்கின்றனர். நாங்கள் அரசு என்ற வகையில் எமது மீனவர்களின் உரிமைக்காக வடக்கில் வாழும் மீனவர்களின் பாதுகாப்புக்காக அனைத்து நடவடிக்கைகளையும் எடுப்பேன் என்றார். .

சூரிய ஒளி இன்று மதிப்பு வாய்ந்ததாக உள்ளது. அது எமது சக்தி. அதை துண்டு துண்டாக விற்பதற்கு நாங்கள் ஒருபோதும் இடமளிக்க மாட்டோம். இந்த ஒப்பந்தங்களை எல்லாம் நாங்கள் மீளாய்வு செய்யவேண்டும்.

இந்த வளங்களை நாட்டினதும் மக்களினதும் எதிர்காலத்திற்காக பயன்படுத்த வேண்டும். கேரள கஞ்சா, உட்பட போதைப்பொருள் பிரச்னை இங்கு இங்கு இருக்கிறது. அவற்றை தடுக்க வேண்டும். எனவே புதிய ஒரு நிலைக்கு இந்த நாட்டை அழைத்து செல்லவேண்டும். அத்துடன் எமது முதலாவது வரவு-செலவு திட்டத்தில் அரச ஊழியர்களுக்கான சம்பள அதிகரிப்பு நிச்சயம் இருக்கும் என்றார்.

# "திரிபோஷவை மூடுவதற்கு சதி"

தான் ஜனாதிபதியாக பதவியேற்று ஒரு வாரத்திற்கு முன்னரே திரிபோஷ தொழிற்சாலையை கலைத்து மூடும் சதியில் ஈடுபட்டுள்ளார் என்று ஐக்கிய மக்கள் சக்தியின் தலைவர் சஜித் பிரேமதாச தெரிவித்துள்ளார்.

இது குழந்தைகள் மற்றும் தாய்மார்களுக்கு எதிரான சதியாகும். நாட்டில் 5 வயதுக்குட்பட்ட குழந்தைகள், இரத்தசோகையால் பாதிக்கப்பட்ட கர்ப்பிணித் தாய்மார்கள், பாலூட்டும் தாய்மார்களுக்கு இந்த திரிபோஷ வழங்கப்பட்டு வருகிறது. மாதம் 16 லட்சம் பக்கெட்டுகள் வழங்கப்பட்டு வருகின்றன. தற்போது 664,920 தாய்மார்களுக்கும் 925,172 குழந்தைகளுக்கு இது வழங்கப்பட்டு வருகின்றன என்றும் குறிப்பிட்டுள்ளார்.

ஐக்கிய மக்கள் சக்தியின் கொழும்பு மாவட்ட வேட்பாளர் சுதத் விக்ரமரத்னவினால் ஏற்பாடு செய்யப்பட்ட அவிசாவளை பிரதேச மக்களுடனான சந்திப்பு சனிக்கிழமை (09) இடம்பெற்றது. அதில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இச்சந்திப்பில் கட்சி செயற்பாட்டாளர்கள் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர். இதில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

தற்போதைய ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்க பதவியேற்ற பின்னர், 2024 ஆம் ஆண்டு செப்டம்பர் 27 ஆம் திகதி வர்த்தமானி அறிவித்தல் இலக்கம் 2403/53 மூலம் திரிபோஷா நிறுவனத்தை கலைப்பதற்கு அல்லது வேறு நிறுவனத்துடன் இணைப்பதற்கு தீர்மானம் எடுத்துள்ளார் என்றும் சஜித் பிரேமதாச தெரிவித்தார்.

உயிர்த் ஞாயிறு தாக்குதல், கொரோனா மற்றும் வங்குரோத்து நிலைமை காரணமாக தாய்மார்கள் மற்றும் குழந்தைகளின் ஊட்டச்சத்து குறைபாடு அதிகரித்துள்ளது என்பதை UNICEF மற்றும் ஐக்கிய நாடுகள் சபை முகவராண்மைகள் கூட ஒப்புக் கொள்ளும் சூழ்நிலையில், ஏழை வர்க்கத்தை பிரதிநிதித்துவப்படுத்துவதாகும், சாதாரண மக்களின் துன்பங்களை அறிவதாகவும் கூறிய ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்க, தான் ஜனாதிபதியாக பதவியேற்ற ஒரு வாரத்திற்கு முன்னரே திரிபோஷ தொழிற்சாலையை கலைத்து மூடும் சதியில் ஈடுபட்டுள்ளார்.

நமது நாட்டில் 5 வயதுக்குட்பட்ட குழந்தைகளுக்கும் இரத்த சோகையால் அவதிப்படும் குழந்தைகளின் தாய்மார்கள் மற்றும் கர்ப்பிணித் தாய்மார்களுக்கு எதிரான சதியாகவே இதை பார்க்க வேண்டியுள்ளது. பாலூட்டும் தாய்மார்களுக்கு திரிபோஷா கிடைக்க வேண்டும். தனியார் நிறுவனம் மூலம் இதை நடைமுறைப்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. இந்த முயற்சியை முறியடிப்போம். தாய்மார்கள் மற்றும் குழந்தைகளின் இந்த உரிமைகளை பாதுகாக்க ஐக்கிய மக்கள் சக்தி உறுதிபூண்டுள்ளது. இதற்கு எதிராகப் பேசுவதால், அவசர அவசரமாக அறிவிப்புகளை வெளியிட்டு, அவ்வாறு மூட மாட்டோம் என தற்போது கதைகளை பரப்பி வருகின்றனர். இலவச சுகாதாரத்தை பாதுகாக்க நாம் அர்ப்பணிப்புடன் செயற்படுவோம். திரிபோஷா நிறுவனத்தை மூட நாம் ஒருபோதும் இடமளிக்க மாட்டோம் என சஜித் பிரேமதாச தெரிவித்தார்.

வேட்பாளராக அநுரகுமார திசாநாயக்க மேடை மேடையாக கூறியவை தற்போது ஜனாதிபதியாக அனைத்தும் பொய்யாகி, செயலில் நடத்திக் காட்ட தோல்வி கண்டுள்ளார் என்பதை அவரே நிரூபித்துள்ளார்.

துறைமுகத்தில் இருந்து ஒரு விலைக்கு எரிபொருள் இறக்கப்பட்டு, மற்றொரு விலைக்கு மக்களுக்கு விற்கப்படுவதாகவும், அதிக வரி, ஊழல், மோசடி, திருட்டு போன்ற காரணங்களே இதற்குக் காரணம் என்றும் தெரிவித்திருந்தார். ஆனால் ஆட்சிக்கு வந்து நிறைவேற்று அதிகார ஜனாதிபதியாக அவர் கூறிய எரிபொருள் மாபியாவை நிறுத்த முடியாது போயிருப்பதாக சஜித் பிரேமதாச தெரிவித்தார்.

பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தில் நடந்த இலஞ்சம், ஊழல்கள், திருட்டுக்களை கண்டுபிடிக்க முடியாது என்று பெற்றோலியக் கூட்டுத்தாபன தலைவர் அநுர குமார திசாநாயக்க ஜனாதிபதி நியமித்த புதிய தலைவர் தெரிவிக்கிறார். நிதியமைச்சின் தீர்மானத்தின் அடிப்படையிலேயே எரிபொருள் விலையை குறைக்க முடியும், எரிபொருள் விலை குறைந்தால் நாடு வங்குரோத்தடைந்து விடும் என்றும் கூட்டுத்தாபனத்தின் தலைவர் கூறும்போது, ஜனாதிபதி அநுர உட்பட ஜே.வி.பி.யின் முன்னணித் தலைவர்கள் பொய்களைக் கூறி திரிகின்றனர் என சஜித் பிரேமதாச தெரிவித்தார்.

## அக்குறனை 28ஆவது தடவையாகவும்

# வெள்ளத்தில் தத்தளித்தது





■ ஏ.எம்.ஜலீல்

நாட்டில் அவ்வப்போது அடைமழை பெய்யும்போது வெள்ளப் பெருக்குகளும் மண்சரிவுகளும் ஆங்காங்கு ஏற்படுவதுண்டு அந்தவகையில் மத்திய மாகாணத்தின் அக்குறனை நகரம் வெள்ளப் பெருக்கினால் பெரிதும் பாதிக்கப்பட்டுவருவது குறிப்பிடத்தக்கது. அக்குறனை நகர் மட்டும், 28 ஆவது தடவையாக வெள்ளத்தில், கடந்த வெள்ளிக்கிழமை (08) மூழ்கியது.

அடைமழை ஏற்படும் காலங்கள்தோறும் அக்குறனையில் வெள்ளப்பெருக்கு ஏற்படுவதும் அதனால் பாரியளவில் பொருட்சேதம் ஏற்படுவதும் இங்கு தொடர்கதையாகி வருகிறது. கடந்தகால வெள்ள அனர்த்தத்தினால் கோடிக்கணக்கில் நஷ்டம் ஏற்பட்டுள்ளமையும் மறுப்பதற்கில்லை வர்த்தக நிலையங்களுக்குள் வெள்ளம் உட்புகுந்ததன் விளைவால் விற்பனை பொருட்களுக்கும்கூட சேதம் ஏற்பட்டமையும் குறிப்பிடத்தக்கது

இங்கு வெள்ளப் பெருக்கு ஏற்படுகையில் கண்டி - மாத்தளை பிரதான போக்குவரத்துப் பாதை முற்றாக வெள்ளத்தில் மூழ்கிவிடுகிறது இந்நிலையில் வாகனங்களுக்குப் போக்குவரத்துச் செய்யமுடியாத நிலையில் கண்டி- - வத்தேகம- மாத்தளை பிரதான வீதியையே உபயோகிக்கும் நிலையும் ஏற்படுகிறது

இந்நிலைமையைக் கருத்திற்கொண்டு இதற்குத் தீர்வுகாணும் வகையில் கடந்தகால அனர்த்தத்தின்போது அக்குறனை வர்த்தக சங்கம், பைதுல்மால், ஜமியதுல் உலமா, மஸ்ஜிதுகள் நிர்வாகம், உட்பட சமூகசேவை அமைப்புகள் என்பன இணைந்த முக்கிய கலந்துரையாடலும் நடாத்தப்பட்டதாகவும் இதன்முடிவில் அனர்த்த குழுவொன்றும் ஏற்படுத்தப்பட்டு சில பணிகளும் முன்னெடுக்கப்பட்டதாகவும் இதுதொடர்பில் சம்பந்தப்பட்ட அமைச்சர்களின் கவனத்துக்கும் கொண்டுவரப்பட்டு இதுவரையில் எவ்வித காத்திரமான செயற்பாடுகளும்

காண்பதற்கில்லை எனவும் தெரிவிக்கப்படுகிறது

அடைமழையின்போது அங்கும்புற, பங்கொல்லாமட, துணுவில, குடுகல, ஹத்தே கான்வாய், வஹகல ஓய, ஆகிய பகுதிகளிலிருந்து வரும் வெள்ளநீர் சுமார் ஏழு அடிகள் வரை உயர்ந்து அக்குறனை சிற்றாருக்கே வந்துசேர்கிறது அக்குறனையில் கொங்கிரீட் தரைகளே கூடுதலாகக் காணப்படுவதால் வெள்ளநீரில் குறைவான வீதமே மண்ணினால் உறிஞ்சப்படுகிறது எனவே 95 சதவீத நீர் ஆற்றுடன் கலந்துவிடுகின்றது என்றும் தெரிவிக்கப்படுகின்றது.

## சின்னம் சூட்டும் விழா...

கொழும்பு கணபதி இந்து மகளிர் மகா வித்தியாலய மாணவ தலைவிகளுக்கான சின்னம் சூட்டும் விழா பாடசாலை அதிபர் சாந்தினி தலைமையில் பாடசாலை பிரதான மண்டபத்தில் அண்மையில், நடைபெற்றது.

இந்நிகழ்வில், பிரதம அதிதியாக கலந்து கொண்ட வீரகேசரி பத்திரிகை நிறுவனத்தின் பிரதம நிறைவேற்று அதிகாரி செந்தில்நாதன் உட்பட அதிபர், ஆசிரியர்கள் மாணவிகளுக்கு சின்னம் சூட்டி வைத்தனர்.









## மதிலை கவிழ்த்து வீட்டுக்குள் புகுந்த பஸ்

பதுளை- மஹியங்கனை பிரதான வீதியில் பயணித்த தனியார் பேருந்தொன்று பலகொல்லை பத்தலப்பிட்டிய பிரதேசத்தில் வைத்து வீதியை விட்டு விலகி அருகில் உள்ள வீடொன்றின் மதிலை கவிழ்த்து விபத்துக்குள்ளான சம்பவம் ஞாயிற்றுக்கிழமை (10) காலை இடம்பெற்றுள்ளது.

விபத்தின் போது சுமார் 30 பேர் பயணிகள் இருந்துள்ளதுடன் பேருந்து சாரதிக்கு சிறு காயங்கள் ஏற்பட்டுள்ளதாகவும், பயணிகள் எவருக்கும் காயம் ஏற்படவில்லை எனவும் பொலிஸார் தெரிவித்தனர்.

குறித்த வீட்டில் ஒரு தம்பதி மற்றும் ஒரு குழந்தை இருந்ததாகவும், அவர்கள் ஒரே அறையில் இருந்ததால் அவர்களுக்கு எந்த பாதிப்பும் ஏற்படவில்லை எனவும் பொலிஸார் தெரிவித்தனர்.

மேலும் விபத்து தொடர்பான மேலதிக விசாரணைகள் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.







## முதலாமிடம்...

திருகோணமலையில் நடைபெற்ற அகில இலங்கை கர்நாடக சங்கீத குழு இசைப் போட்டியில் (தரம் 9–11) யாழ்ப்பாணக் கல்லூரி தேசிய மட்டத்தில் முதலாம் இடத்தினை பெற்றுள்ளது.

## வாகன விபத்தில் ஒருவர் மரணம்

■ எச்.எம்.எம்.பர்ஸான்



ஓட்டமாவடி மியாங்குள - கொழும்பு வீதியில் ஞாயிற்றுக்கிழமை (10) இடம்பெற்ற விபத்தில் ஒருவர் மரணமடைந்துள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

ஓட்டமாவடி அக்கர் பள்ளிவாசல் வீதியைச் சேர்ந்த முஹம்மது இஸ்மாயில் பாறூக் என்பர், தான் முகாமையாளராக பணிபுரியும் ரிதிதென்ன எரிபொருள் நிரப்பு நிலையத்திற்கு கடமைக்குச் செல்லும் போதே விபத்துக்குள்ளாகி மரணமடைந்துள்ளார்.

மோட்டார் சைக்கிளில் பயணம் செய்த குறித்த நபர் மீது எதிரே வந்த சிறிய லொறி (எல்ப) மோதியதில் சம்பவ இடத்தில் மரணமடைந்துள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

லொறியின் சாரதி கைது செய்யப்பட்டுள்ளதுடன் விபத்து தொடர்பான மேலதிக விசாரணைகளை வாழைச்சேனை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

## தாமரை கோபுரத்தில் துப்பாக்கிச் சூடு

கொழும்பு, தாமரை கோபுரம் (நெலும் குளுன) வளாகத்தில் இடம்பெற்ற இசை நிகழ்ச்சியின் போது அங்கிருந்த பாதுகாப்பு உத்தியோகத்தர் மீது இனந்தெரியாத நபர் ஒருவர் துப்பாக்கிச் சூடு நடத்தியதாக மருதானை பொலிஸார் தெரிவித்தனர்.

சனிக்கிழமை (09) இடம்பெற்ற இந்த துப்பாக்கிச் சூட்டில் காயமடைந்த பாதுகாப்பு உத்தியோகத்தர் கொழும்பு தேசிய வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

## புல் ஏற்றிச் சென்ற ட்ரகின் பின் ட்ரெய்லர் கவிழ்ந்தது

■ செ.திவாகரன், டி.சந்ரு, ரஞ்சித் ராஜபக்ஷ

கொழும்பு துறைமுகத்திலிருந்து அம்பேவெல கால்நடை பண்ணைக்கு புல் ஏற்றிச் சென்ற கொள்கலன் ட்ரக் வண்டியின் பின் ட்ரெய்லர் வீதியின் குறுக்கே கவிழ்ந்ததில் நுவரெலியா - கம்பளை பிரதான வீதியின் வாகன போக்குவரத்து தடைப்பட்டிருந்தது.



நுவரெலியா- கம்பளை பிரதான வீதியில் லபுகலை குடோ ஓயா பகுதியில் ஞாயிற்றுக்கிழமை (10) பிற்பகல் 1.30 மணியளவில் இந்த விபத்து இடம்பெற்றுள்ளது.

பல வளைவுகளைக் கொண்ட குறித்த வீதியில் கொள்கலன் டிரக்கின் சாரதி சிறிது தூரம் செல்ல முற்பட்ட போது, கொள்கலனின் பின் ட்ரெய்லர் வீதியில் கவிழ்ந்து விபத்துக்குள்ளானது.


### கம்பஹா மஹாநகர சபை

**பொருட்கள் மற்றும் சேவைகளை வழங்குவதற்காக விநியோகஸ்தர்களை பதிவுசெய்தல் – 2025**

2025 ஆம் ஆண்டில் கம்பஹா மஹாநகர சபைக்கு தேவையான பின்வரும் பொருட்கள் மற்றும் சேவைகளை வழங்குவதற்காக விநியோகஸ்தர்களை பதிவுசெய்தல் 2024.11.12 ஆம் திகதி முதல் 2024.12.06 ஆம் திகதி வரை வார நாட்களில் காலை 9.00 மணி முதல் மாலை 4.00 மணி வரை செய்யப்படும்.

அனைத்து வகையான எழுதுபொருட்கள், கணினிகள் மற்றும் கணினி பாகங்கள் மற்றும் சேவைகள், அலுவலக தளபாடங்கள், சீருடைகளுக்கான ஜவுளி, காலணிகள், ஆடைகள், தீயணைப்பு உபகரணங்கள், பாதுகாப்பு உபகரணங்கள், கையுறைகள், சுவாசக் கருவிகள், அடையாள அட்டை செயலாக்கம், சாலை பராமரிப்பு மற்றும் கட்டுமானம் உபகரணங்கள் மற்றும் இயந்திரங்கள், பிளம்பிங் பராமரிப்பு, மின் பராமரிப்பு, வெல்டிங், தச்சு, ஏர் கண்டிஷனிங் பராமரிப்பு, விவசாயத் துறைகளுக்கான பொருட்கள் மற்றும் சேவைகள், தெரு விளக்குகளுக்கான அனைத்து வகையான மின் பாகங்கள், சுகாதார பொருட்கள், அனைத்து வகையான கால்நடை மருந்துகள் மற்றும் உபகரணங்கள், அனைத்து வாகன உதிரி பாகங்கள், வாகனம் பராமரிப்பு மற்றும் சேவைகள், அனைத்து வகையான மரம், விளையாட்டு உபகரணங்கள், நூலகங்கள் புத்தகங்கள் மற்றும் செய்தித்தாள்கள், இணைய சேவைகள், வாடகை அடிப்படையில் அனைத்து வகையான வாகனங்கள் மற்றும் இயந்திரங்கள் வழங்கல், நிகழ்வுகள் உணவு பொருட்கள் வழங்கல், அலங்கார பொருட்கள், நில அளவீடு மற்றும் மதிப்பீடு, தொழிலாளர் வழங்கல், ஒப்பந்ததாரர்கள் கட்டிடம் மற்றும் கட்டுமான பணிகள், பிற பொருட்கள் மற்றும் சேவைகள்.

பதிவு செய்வதற்கான விண்ணப்பப் படிவம் மற்றும் மேலதிக தகவல்களை கம்பஹா மஹாநகர சபையின் கணக்கு திணைக்களத்திலோ அல்லது கம்பஹா மஹாநகர சபையின் www.gampaha.mc.gov.lk என்ற இணையத்தளத்திலோ பெற்றுக்கொள்ள முடியும். சபையில் நிர்ணயிக்கப்பட்ட பதிவுக் கட்டணத்தைச் செலுத்தி பதிவு செய்யலாம். காசோலைகள் மூலம் கட்டணம் செலுத்தும் பட்சத்தில், “மஹாநகர ஆணையாளர் மஹாநகர சபை - கம்பஹா” என்ற முகவரிக்கு அனுப்பப்பட வேண்டும் மற்றும் விண்ணப்பத்தை அனுப்பும் போது, கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் “விநியோகஸ்தர்களை பதிவுசெய்தல் - 2025” என குறிப்பிட்டு மஹாநகர ஆணையாளர், மஹாநகர சபை, கம்பஹா என்ற முகவரிக்கு விண்ணப்பத்தை அனுப்ப வேண்டும்.

**மஹாநகர ஆணையாளர்,**
**மஹாநகர சபை,**
**கம்பஹா**


## சக்கர கதிரையில் வந்தவரிடம் ‘குஷ்’

■ டிகேஜி கபில

கட்டுநாயக்க விமான நிலையத்திலிருந்து சக்கர கதிரையில் பயணித்த “கிரீன் சேனல்” ஊடாக வெளியேற முற்பட்ட வயோதிப பயணி ஒருவர் ஞாயிற்றுக்கிழமை (09) சுங்க போதைப்பொருள் கட்டுப்பாட்டு பிரிவின் அதிகாரிகள் குழுவினால் குஷ் போதைப்பொருளுடன் கைது செய்யப்பட்டுள்ளார்.



கைதான கொழும்பு - 10, மருதானை பிரதேசத்தில் வசிக்கும் 58 வயதுடைய எனவும், பாங்கொக்கில் இருந்து AirAsia விமானமான FD-047 இல் 10.25 மணியளவில் நாட்டை வந்தடைந்தார் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

குறித்த நபர்,சக்கர கதிரையில் அமர்ந்து விமான நிலைய சுங்க வளாகத்தின் பச்சைப் பாதையில் இலங்கை துணை அதிகாரி உதவியோடு சென்றுகொண்டிருந்த போது, அதிகாரிகளால் சோதனை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

இந்நிலையில், அவரின் பையில் 05 கிலோ கிராம் குஷ் போதைப்பொருள் கைப்பற்றப்பட்டது.

மேலும், கைது செய்யப்பட்ட பயணி மற்றும் அவர் கொண்டு வந்த குஷ் போதைப்பொருளை மேலதிக விசாரணைகளுக்காக கட்டுநாயக்க விமான நிலைய பொலிஸ் போதைப்பொருள் ஒழிப்புப் பிரிவினரிடம் ஒப்படைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

# கடினமாக உழைத்து சம்பாதித்ததை தூக்கி எறிய வேண்டாம்

கடினமாக உழைத்து சம்பாதித்ததை முதலீடு எனும் வலையை வீசுகின்ற வலையமைப்புகளில் சிக்கி சின்னாப்பின்னமாகி தவிப்பதை விடவும், முறையான நிதிநிறுவனங்கள், வங்கிகளில் வைப்பிடுவதன் ஊடாக, ஓய்வுகாலத்தில் நிம்மதியாக வாழமுடியும். எனினும், கூடிய இலாபத்தை மட்டுமே இலக்காக கொண்டவர்கள் பலரும், அந்த வலைக்குள் சிக்கிவிடுகின்றனர்.

வலையில் சிக்கவைப்பதற்காக, கண்கவர் அறிவிப்புகள், மனதை தொடும் வார்த்தைகளை, அவ்வாறான நிறுவனங்களைச் சேர்ந்தவர்கள் அள்ளிவீசுவார்கள். இறுதியில், இருந்ததையும் இழந்துவிட்டு, நடுத்தெருவில் நிற்கவேண்டிய நிலைமை பலருக்கும் ஏற்பட்டுள்ளது. அவ்வாறான ஏமாற்று பேர்வழிகள் 'பிரமிட்டு' எனும் பெயரில் திட்டங்களை வகுத்து அப்பாவிகளை ஏமாற்றிவிடுகின்றனர்.

'பிரமிட்டு' பணம் கொள்ளையடிக்கும் கும்பலாகும். குருணாகல் பகுதியில் இவ்வாறுதான் மோசடியான நிதி நிறுவனத்தை நடத்திச்சென்று, வெளிநாட்டுக்கு தப்பியோடி தலைமறைவாகியிருந்துவிட்டு மீண்டும் நாடுதிரும்பிய நபரும், அவரை அழைத்துச் செல்வதற்கு விமான நிலையத்துக்குச் சென்றிருந்த மனைவியும் கைது செய்யப்பட்டுள்ளனர்.

எளிதான வழிகளைத் தேடுபவர்கள். அந்த மாதிரி மனதைக் கவரும் தந்திரமானவர்கள் ஒரு நிதி நிறுவனக் கட்டமைப்பை அமைக்கிறார்கள்.

இவை வங்கிகள் அல்ல. குறைந்த பட்சம் கிராமப்புற வங்கி வடிவில் இல்லை. வாய் வார்த்தை மற்றும் விளம்பரங்கள் மூலம், இந்த நிறுவனங்கள் வங்கியின் வட்டியை விட பத்து மடங்கு தருவதாக கூறுகின்றன.

குருணாகலில் நிறுவப்பட்ட நிதி நிறுவனமும் வேலைகளை உருவாக்கியதால், மக்கள் வந்து அதிக வட்டிக்காக தங்கள் பணத்தை வைப்பிலிட்டனர். வங்கிகள் போன்றவற்றின் பெயர்களைப் பயன்படுத்துவது சட்டப்பூர்வமானது அல்ல என்பதால் மாற்று பெயர்களை வைத்தனர்.

ஒரு வைப்புத்தொகை ஏற்றுக்கொள்ளப்பட்டால், வங்கி ஒரு ரசீதை வழங்குகிறது. ஆனால், இந்த நிறுவனம் பட்டப்படிப்பு சான்றிதழ் போன்ற புடைப்பு முத்திரையுடன் சட்டக அளவு சான்றிதழை வழங்குகிறது.

அதனால், சாதாரண மக்கள் மனங்களில் ஒரு நம்பிக்கை ஏற்படுகின்றது. தங்களுடைய முதலீட்டுக்கு இந்த சான்றிதழே காவலாளியாக கருதுகின்றனர்.

குருணாகல் பிரமிட் நிதி நிறுவனத்தில் சுமார் 2,500 வைப்பாளர்கள் பணத்தை வைப்பிலிட்டுள்ளனர். இவ்வாறு முதலீடு செய்யப்பட்ட பணத்தில், நகரில் அடுக்குமாடி குடியிருப்பு கட்டுவது, அப்பகுதியில் இரண்டு பெரிய வீடுகளை வாங்குவது உள்ளிட்டவற்றை அந்த நிறுவனம் செய்துள்ளது, சில நாட்களுக்குப் பிறகு, முதலீட்டை எடுத்த நிறுவனத்தைச் சேர்ந்த நபர் காணாமல் போனார்.

இதனுடன்தான் அரசாங்கத்தையும் மத்திய வங்கியையும் அவர்களின் முட்டாள்தனம் என்று மக்கள் குற்றம் சாட்டத் தொடங்குகிறார்கள். பொலிஸார் நடத்திய விசாரணையில், ஆயிரம் கோடி ரூபாய்க்கு மேல் மோசடி செய்தது தெரியவந்தது. அவ்வாறு சுரண்டிக்கொண்டு ஓடிய நபரே, தன்னுடைய மனைவியுடன் கைது செய்யப்பட்டுள்ளார்.

இவ்வாறான சுரண்டல்களை முன்னெடுத்து அப்பாவி மக்களின் வயிற்றில் அடிக்கும் மோச கும்பல்களுக்கு உரிய தண்டனை கிடைக்கவேண்டும். பாதிக்கப்பட்ட தரப்பினருக்கு முறையான நியாயம் வழங்கவேண்டும். அத்துடன், கடினமாக உழைத்து சம்பாதித்ததை தூக்கி எறிய வேண்டாம் என்பதே எமது அறிவுரையாகும்.

தமிழ்Mirror www.tamilmirror.lk க்கு
எழுதுங்கள்

தமிழ்மிரர் வாசகர்களுக்கு வணக்கம்.
எமது பத்திரிகைக்கு உங்களுடைய ஆக்கங்கள், விமர்சனங்களை அனுப்பிவைக்கலாம்.
கருத்துகளையும் வரவேற்கின்றோம்.

அத்துடன் உங்கள் பிரதேசங்களில் இடம்பெறும் விளையாட்டு, கலை, கலாசார நிகழ்வுகளை புகைப்படங்களுடன் அனுப்பிவைக்கலாம்.

பிரதேசத்தில் நிலவும் பிரச்சினைகள் தொடர்பிலும் எழுதலாம்.

அனுப்பவேண்டிய முகவரி
தமிழ்மிரர்
ஆசிரியர் பீடம்
No 8. Hunupitiya Cross Road, Colombo 2. P.O. Box 1136

Editorial: Tel: 011 2 479 372-8, Fax: 011 2 304 114
Marketing Manager (Dir.) 011 2 479 822, 077 3421 476
Circulation Manager (Dir.) 011 2 479 672, 077 3 219 775,
Subscription Manager (Dir.) 011 2 479 626, 011 2 479 628, 077 3 502 183
E-mail: tamilmirror@wijeya.lk






## வாழ்வியல் தரிசனம்

எவருடனும் முரண்படுதல் இலகுவானது. சிலசமயம் இதன் விளைவுகள் விசாலமானது. தேவையற்ற வாக்குவாதங்களால் எவரும் தங்களை மகா புத்திசாலிகள் எனக் கருதலாகாது.

பேசும்போது காரசாரம் மிகையானால் அதைத் துண்டித்த விலகுவதே புத்திசாலித்தனம். எங்களை நாங்களே புத்திசாலி என நிரூபிக்க எண்ணுவதே கோமாளித்தனம். சிலசமயம் பிறரை வெல்லவைக்கப் பின்வாங்குவதுபோல் நடிப்பது நல்லது.

கணவன் உக்கிரமாகப் பேசினால், மனைவி விட்டுக்கொடுத்து விலக வேண்டும். அதேபோல் மனைவி சண்டைபோடும்போது, கணவன் சமயோசிதமாக அப்பால் நகருவதே புத்திசாலித்தனமானது. ஏட்டிக்குப் போட்டியான தர்க்கத்தால் பிரயோசனம் இல்லை.

எல்லோருக்கும் ரோசம், தன்மானம் இருக்கின்றது. அதில் நியாயமும் இருக்கலாம். சில தர்க்கங்களை நிரூபிக்க வேண்டும் என அடம்பிடித்தலாகாது. சமாதானம், சமரசம், மௌனம், அமைதியை உருவாக்கும் எவரையும் பகைத்தலாகாது. இதனால் எவரும் கோழைகள் கிடையாது.

-பருத்தியூர் பால. வயிரவநாதன்

# தமிழ் இளைஞர் சமூகத்தின் முடிவு சரியானதா?

லக்ஸ்மன்

பாராளுமன்றத் தேர்தலில் தேசியம், பெருந்தேசியம், தமிழ்த் தேசியம் என பிரச்சாரங்கள், எதிர்ப் பிரச்சாரங்களாக தேர்தல் வெற்றிக்கான சூட்டு அனல் கக்கிக் கொண்டிருக்கிறது. அதேநேரத்தில் தேசிய மக்கள் சக்திக்கு வெற்றிவாய்ப்பு அதிகரித்திருப்பதாகவும் இளைஞர்களிடம் ஏற்பட்டிருக்கும் தேசிய மக்கள் சக்தியை நோக்கியதான அலை வட கிழக்கிலும் ஆதிக்கத்தைச் செலுத்தும் என்பதாகவும் கருத்துகளும் பறக்கின்றன. இதற்கெதிரான பிரச்சாரங்களை வட கிழக்கிலுள்ள அரசியல்வாதிகள் செய்திருக்கிறார்களா? அது போதுமானதா? என்பது சந்தேகத்திற்கிடமானதாகவே இருக்கிறது.

மக்கள் விடுதலை முன்னணியாக இருந்து தற்போது தேசிய மக்கள் சக்தியாக பரிணாமம் பெற்றுள்ள கட்சி இலங்கையின் ஆட்சி அதிகாரத்தினை தற்போது தனக்குள் வைத்துக் கொண்டிருக்கிறது. இருந்தாலும் ஆட்சிக்கு வரும் முன்னரும் ஜனாதிபதியாகத் தெரிவு செய்யப்பட்ட பின்னரும் தே.ம. சக்தியானது வட கிழக்குத் தமிழர் தாயகம் தொடர்பாகவும் தமிழர்களின் தார்மீக உணர்வுகள் தொடர்பாகவும் தெளிவான புரிதலுடன் இருக்கிறதா என்றால் அது இல்லையென்பதாகவே இருக்கிறது.

ரோஹண விஜேவீர தலைமையிலான ஜே.வி.பி.யினரது ஆயுதப் புரட்சிக்கு அடிநாதமாக அவர்களுடைய கற்பித்தல்கள் காணப்பட்டன. இந்திய விஸ்த்தரிப்புவாதம், தமிழர்களின் மேலாதிக்கம் போன்றவை தொடர்பான கற்பித்தல்கள் ஊடாகவே அவர்களுடைய வளர்ச்சி காணப்பட்டிருந்தது, ரோஹண விஜேவீரவின் மரணத்தின் பின்னர் சோமவங்ச அமரசிங்க தலைவராக வந்த பின்னரும் கூட அவர்களின் போக்கில் மாற்றம் ஏற்பட்டிருக்கவில்லை. இக் காலத்தில் ஜே.வி.பி.யின் முக்கிய பிரச்சார பீரங்கியாகத் திகழ்ந்தவர் தமிழர் விரோதம் பேசும் விமல் வீரவங்ச ஆவார். அவர் இப்போது அக்கட்சியில் இல்லையானாலும் அவரது கருத்துக்கள் ஜே.வி.பியின் கருத்துக்களாகவே அப்போது இருந்திருக்கின்றன.

ஜே.வி.பி.யினர், சந்திரிகா பண்டாரநாயக்காவின் அரசாங்கத்தில் இணைந்திருந்த காலத்தில் விடுதலைப் புலிகளுக்கும் அரசுக்கும் இடையே வட கிழக்கில் சுனாமிக்குப் பின்னரான அபிவிருத்திக்கான பொதுக்கட்டமைப்பை ஏற்படுத்தி அதன் மூலம் சுனாமி அபிவிருத்தி வேலைத்திட்டங்களை முன்னெடுக்க இருதரப்புக்குமிடையே உடன்பாடு எட்டப்பட்டது. ஆனால் இந்த உடன்பாட்டை நிர்மூலமாக்கியவர்கள் ஜே.வி. பியினரே என்பது வரலாறாகும். இதற்காக அவர்கள் பயன்படுத்திய ஆயுதம் அமைச்சுப் பதவிகளைத் துறந்து அரசுக்கு தாம் வழங்கிய ஆதரவினை விலக்கிக் கொண்டமையாகும்.

அதே நேரத்தில் புலிகள் ஆயுத ரீதியாக வலுவடைந்து இலங்கை இராணுவத் தரப்பு தோல்விகளைச் சந்தித்த நிலையில் இலங்கை இராணுவத்துக்கு பெருந்தொகை சிங்கள இளைஞர்களை இணைத்துக் கொடுத்து யுத்தத்தை உக்கிரப்படுத்தி தமிழர்களின் ஆயுதப் போராட்டம் மௌனிக்கப்பட காரணமாக அமைந்தவர்களும் ஜே.வி. பியே. இனப்பிரச்சினைத் தீர்வுக்காக இலங்கை இந்திய அரசுகள் மேற்கொண்ட ஒப்பந்தத்தைச் செயற்படுத்தாது தடுப்பதில் முக்கிய பங்கு வகிப்பவர்கள். தற்காலிக இணைப்பாக இருந்த வட கிழக்கு மாகாணங்களை நீதிமன்றம் சென்று நிரந்தரமாக பிரித்த பெருமையும் இவர்களுடையதே.

இத்தனை பெருமைகளையும் கொண்ட நிலையில் தங்கள் முகத்தை மறைத்து தேசிய மக்கள் சக்தியாக நாட்டில் மலர்ந்திருக்கும் தே.ம.சக்தியை தமிழ் இளைஞர்கள் பார்க்கும் பார்வை வித்தியாசமாக இருப்பது வினோதமானதே.

தமிழர்களுடைய கோரிக்கை தொடர்பில் நழுவல் போக்கையே கடைப்பிடித்து வரும் தே.ம.ச தமிழர்கள் விடயத்தில் சமஷ்டி வழங்கப்படாது என்பதனைப் பல தடவைகளில் கூறிவிட்டது. ஆயுதப்போராட்டம் உருவான வரலாறு அதன் பால் தமிழ் இளைஞர்கள் ஈர்க்கப்பட்ட வரலாறு போன்றவை இன்னமும் தென்பகுதி மக்களுக்கும் பெரும்பான்மை அரசியல்வாதிகளுக்கும் புரியவில்லை. அல்லது புரிந்துகொள்ள முயற்சிக்கவில்லை என்பதனையே இது காட்டுகின்றது. இதற்கு தே.ம.ச. கூடு விதிவிலக்கல்ல என்பதும் நிரூபிக்கப்படுகிறது. அத்துடன், சிங்களவர்களுடன் தமிழர்கள் சமரசம் செய்து கொள்ளவேண்டும் என்கிற போக்கிலேயே தே.ம.சக்தியினர் இருந்து வருகின்றனர் என்பதனையும் எடுத்துக்காட்டுகிறது. அதனால்தான், வட கிழக்குத் தமிழர் தாயகத்துக்கேயுரிய தனியான பிரச்சினைகள் இருக்கின்றன என்பதனை மறுதலிக்கின்றனர் என்ற சந்தேகமும் ஏற்படுகிறது.

இந்திய இலங்கை ஒப்பந்தம் என்பது இலங்கை அரசாங்கத்திற்கும் இந்திய அரசாங்கத்துக்குமிடையில் ஏற்படுத்தப்பட்டது. அதன் அடிப்படையிலேயே இலங்கை அரசியலமைப்பில் 13ஆவது அரசியல் சீர்திருத்தம் கொண்டுவரப்பட்டது. ஆனால், இவைபற்றி தெளிவான கருத்துக்களை ஜனாதிபதியோ அவரது அமைச்சர்களோ கூறுவதைத் தவிர்த்து ம.வி மு.தலைவர்கள் ஊடாக கருத்துக்களை வெளியில் விடுகின்றனர். இது தந்திரோபயம்மிக்க நடவடிக்கையே. இதனை அரசாங்கத்தின் அதிகாரபூர்வ கருத்தாக எடுத்துக்கொள்ளலாமா என்பது இந்த இடத்தில கேள்வியாக இருக்கிறது.

இந்த இடத்தில்தான், சமஸ்டி வழங்கமாட்டோம். தனிநாடு வழங்கமாட்டோம். பிரிவினைக்கு இடமளியோம் என்கின்ற கருத்துக்கள் இதற்கு முன்னர் ஆட்சியில் இருந்து அரசாங்கங்களின், அதன் அரசுத் தலைவர்களின் கருத்துகளாகும். அந்த கருத்துக்களையே தற்போதைய ஜனாதிபதியும், அரசாங்கமும் கொண்டிருக்குமானால் அது பழைய பல்லவிகளே.

ஜே.வி.பி. எனப்படும் மக்கள் விடுதலை முன்னணி ஆயுதப் போராட்டத்தில் அதிதீவிரமாக ஈடுபட்டு இரு தடவைகள் நாட்டில் ஆட்சிக் கவிழ்ப்புக்கு முயன்று தோற்றுப் போனதாகும். ஆனால் அதன் பின்னர் ஜனநாயக வழிக்கு வந்திருந்தது. அவர்களைப் போலவே ஆயுதப் போராட்டத்தினை நடத்தி அது தோற்றகடிக்கப்பட்ட நிலையில் தமிழர்கள் நின்று கொண்டிருக்கிறார்கள். எனவே இவர்களின் கோரிக்கைகளை நிராகரிக்கலாம் என்ற தப்பான எண்ணமும் சிங்களத் தலைவர்களிடம் காணப்படுகிறது.

ஆயுதம் மூலமே தமிழர்களின் இலட்சியத்தை அடைய முடியும் என்று ஆயுதம் ஏந்திப் போராடி சர்வதேச தலையீடுகளின் பின்னரும் கூட ஜனநாயகப் போராட்டத்திறகுள் தீர்வில்லாத நிலையே காணப்படுகிறது. அவ்வாறானால் இது தமிழர்களுக்கு மிகவும் ஆபத்தானது. ஜனநாயகப் போராட்டத்துக்கான தேவை அற்றுப்போனது என்பதாக இதற்கு அரத்தம் கொள்ளப்படாது மாறாக அதற்கான வாய்ப்பு இல்லாமல் ஆக்கப்பட்டதாகவே அர்த்தப்படும்.

நாட்டில் ஏற்பட்டிருக்கும் நிலையானது தேர்தல் வரலாற்றில் பாராளுமன்றத் தேர்தலின் அர்த்தத்தையும் ஜனாதிபதித் தேர்தலின் அர்த்தத்தையும் சரியாகப் புரிந்துகொள்ளாமையினால் ஏற்பட்டிருப்பதாகக் கொள்ளலாம். அதே நேரத்தில் வட கிழக்கில் குறிப்பிட்டளவு மக்களிடமும் இளைஞர்களிடமும் ஏற்பட்டிருக்கும் சாய்வு நிலையானது இந்தப் புரிதலின்மையின் விளைவாகும்.

நாட்டின் ஜனாதிபதித் தெரிவின்போது பெரும்பான்மைக் கட்சிகளின் வேட்பாளர் ஒருவருக்கு ஆதரவு வழங்குவதும் அவர் தோற்றுப் போவதும் பின்னர் பாராளுமன்றத் தேர்தலில் தனித்துப் போட்டியிடுவதும் தமிழ்த் தேசியக் கட்சிகள் வழமையாகக் கடைப்பிடிக்கின்ற நடைமுறையாகும். கடந்த ஜனாதிபதித் தேர்தலில் தமிழ்ப் பொது வேட்பாளர் ஒருவரை தமிழ்த் தரப்பு நிறுத்தி தம்முடைய நடைமுறையில் மாற்றம் ஒன்றை ஏற்படுத்துவதற்கு முனைந்திருந்தனர். பெரும்பான்மை வேட்பாளர் ஒருவர் வெற்றிபெற்றார்.

தமிழர்கள் மீதும் வடகிழக்கு மீதும், மொழி, தொல்லியல் தொன்மங்கள், கலாசாரம், மதங்கள், பண்பாடு என சிங்கள அத்துமீறல்கள் சுதந்திரத்துக்குப் பின்னரான காலத்திலிருந்து ஏற்பட்டுக் கொண்டே வந்திருந்தது. அதன் காரணமாகவே அகிம்சை வழி, ஆயுத வழி என தமிழர்களின் செயற்பாடுகள் பரிணாமம் பெற்றிருந்தன. ஆனால் போராட்டங்கள் தோற்றுப் போனமை காரணமாக மீண்டும் மீண்டும் போராட்டம் நடத்தப்பட்டு வருகின்றபோது ஏற்படுகின்ற சலிப்பு நிரந்தரமானதென்ற மனோநிலையை உருவாக்குவதில் தவறில்லை. அந்தத் தவறுக்குள் பலர் அகப்படவேண்டிய நிலையே தோன்றும். இப்போது தேசிய மக்கள் சக்தி மீது சாயும் நிலையும் அதுவே.

ஆனால், ஜனாதிபதித் தேர்தலில் வட கிழக்கில் வீசிய தேசிய மக்கள் சக்தி என்ற அலை தொடர்பாக நாம் அக்கறை கொள்ள வேண்டிய அவசியமில்லை என்ற தமிழ்த் தேசிய அரசியல்வாதிகளின் நிலைப்பாடு நூறுவீதம் சரியும் இல்லை. அவர்களுக்கிருக்கும் தமிழ்த் தேசியம் தோற்காது என்கிற உறுதியான சிந்தனை சிறு மாயமாகக் கூட இருக்கலாம். அதற்காக அது மீது அபரிமித நம்பிக்கை கொள்வதும் சரியல்ல. மாற்றத்தை நோக்கி அசையாத சமூகம் முன்னேற்றத்தை நோக்கி நகர முடியாது என்பது உண்மையானாலும் அது சரியான நெறிமுறைகளுடனானதாக இருக்கவேண்டும் என்பதனை இளைஞர்கள் புரிந்துகொள்வதும் முக்கியமே. என்பதனை இளைஞர்கள் புரிந்துகொள்வதும் முக்கியமே.

## கடிதங்கள்

# தண்ணீர் வசதி வேண்டும்

ஹாலிஎல உனுகல்ல தோட்டம் அங்குறுமலை பிரிவு 3 ல் தண்ணீர் வசதி இன்மையால் அப்பகுதி மக்கள் அதிக சிரமத்திற்கு உள்ளாகியுள்ளனர்.

அரசியல்வாதிகள் பலர் அடிக்கடி வருகை தந்த போதும், அவர்களிடம் முறைப்பாடுகள் கொடுத்தாலும், உறுதி மொழியை தவிர, ஆக்கப்பூர்வமான நடவடிக்கைகள் எவையும் முன்னெடுக்கப்படவில்லை என அப்பகுதி மக்கள் தெரிவிக்கின்றனர்.

குடிநீர் பெற்று தருவதாக கூறி பிரதேச மக்களிடம் நான்கு மாதங்களுக்கு முன்னர் ரூ.4000 வசூலிக்கப்பட்தாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதற்கமைய, அப்பகுதியில் இருக்கும் ஒரு சிலர் பணம் செலுத்தி மோட்டார் பொருத்தி நீரை பெற்றுக் கொள்வதாகவும், வசதி குறைந்தோர் குறிப்பிட்ட ஒரு இடத்தில் அனைத்து தேவைகளையும் நிவர்த்தி செய்து வருவதாகவும் தெரிவிக்கின்றனர்.

எனவே, தண்ணீர் பிரச்சனைக்கு உடனடி தீர்வு பெற்றுத் தருமாறு உரிய அதிகாரிகளிடம் பிரதேச மக்கள் கோரிக்கை விடுத்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

பி. மயூரதி

# ஒரு மாணவனின் டைரியிலிருந்து...



பிரபாகரன் ஹரிஷ்கரன்,
தரம்–11, யா/கொக்குவில் இந்துக் கல்லூரி

**பாடசாலையில் நாடக ஆசிரியர் , ராகுல் என்ற மாணவனையும் ஸ்வேதா என்ற பெண் மாணவியையும் வேறு சில ஆண், பெண் மாணவர்களையும் அழைத்துச் சில நாட்களில் கொண்டாட இருக்கும் வாணி விழாவிற்காக சிலப்பதிகாரத்தில் உள்ள கண்ணகி வழக்குரை நாடகத்தை மாணவர்களுக்குப் பயிற்சி வழங்குவதற்தாக அவ்வவ் மாணவர்களுக்குப் பொருத்தமான பாத்திரங்களை வழங்கினார்.**

ராகுலுக்கு கோவலன் பாத்திரத்தையும், ஸ்வேதாவிற்கு கண்ணகி பாத்திரத்தையும் நாடக ஆசிரியர் கொடுத்த போது ஸ்வேதா கண் கலங்கி அழத் தொடங்கினாள். இதனை அவதானித்த நாடக ஆசிரியர் அவளை என்ன நடந்தது? ஏன் அழுகிறாய்? என்று கேட்டபோது அவள் நடந்தவற்றை கூறினாள்.

அப்போதுதான் புரிந்தது ராகுலும் ஸ்வேதாவும் நெருங்கிய நண்பர்கள் என்றும் ராகுல் ஸ்வேதாவை பாடசாலையில் நண்பன் என்ற ரீதியில் சந்தித்து பேசும் போதெல்லாம் சில வகுப்பு மாணவர்கள் ராகுலையும் ஸ்வேதாவையும் தவறாக புரிந்து அவர்களைத் தவறாகப் பேசியுள்ளனர்.

அதுவும் இருவரின் காதுபடவும் பேசியுள்ளனர். ராகுல் இதையெல்லாம் ஒரு பொருட்டாகவே எண்ணாது சாதாரணமாகவே இருந்தான். ஆனால் ஸ்வேதாவால் அவ்வாறு இருக்க முடியவில்லை, ஏனென்றால் அவள் மென்மையான சுபாவம் கொண்டவள். எந்த அளவுக்கு என்றால் வகுப்பாசிரியர் ஏசினால் கூட உடனே அழுது விடுவாள். இப்படி இருக்கும் போது அவளைத் தவறாகப் பேசியதால் ஸ்வேதா ராகுலுடன் கொண்ட நட்பை கொஞ்சம் கொஞ்சமாக விலக்கத் தொடங்கினாள், இப்படிப்பட்ட நிலையில் ஸ்வேதாவும் ராகுலும் கண்ணகி மற்றும் கோவலன் எனும் ஜோடிப் பாத்திரத்தை அம்மானவர்கள் முன்னிலையில் நடித்தால் இருவரையும் மேலும் தவறாகப் பேசுவார்கள் என்று எண்ணியே கண் கலங்கினாள்.

> **அப்பெண் தோழிகள் தீர்த்து வைக்க எண்ணினார்கள்...**

இதற்கு என்ன தீர்வு கூறுவது என்று தெரியாது இருந்த நாடக ஆசிரியர், இறுதியாக ராகுலுக்கு வேறு ஒரு பெண் மாணவியை ஜோடியாக நடிக்குமாறு பணித்தார். இங்கு ராகுல் நடந்த எல்லாப் பிரச்சனைகளையும் புரிந்து கொண்டு தவறாக பேசிய அந்த மாணவர்களின் சட்டையைப் பிடித்துக் கோபத்துடன் சண்டையிட ஆரம்பித்தார். என்னை என்ன வேண்டுமானால் சொல்லுங்கள் என்னையும் சுவேதாவையும் சேர்த்து வைத்துத் தவறாகப் பேசினால் எனக்குக் கெட்ட கோபம் வரும் என்று கூறிவிட்டு அங்கிருந்து நகர்ந்தான்.

ராகுலுக்கு சுவேதா மீது தனிப்பட்ட எந்த தீய எண்ணமும் இல்லை. அவளை ஒரு நல்ல தோழியாகவே எண்ணியிருந்தான்.அவனது நல்ல எண்ணத்தைப் புரிந்து கொள்ளாத மற்றைய மாணவர்களின் பழிச்சொல்லால் தனது நண்பியின் நட்பை இழந்துவிட்டதை எண்ணிக் கலங்கினான் ராகுல்.

ஆனால் ராகுலுக்கு ஒரு குணம் உண்டு அவன் பாடசாலையில் உள்ள சக மாணவிகளின் நடத்தை குணம் போன்றவை அவனுக்கு பிடித்திருந்தால்

உடனே அவர்களைத்தன் தோழியாக்கிக் கொள்வான். இவ்வாறு தோழியாக்கிக் கொண்ட அப்பெண்கள் அவனுக்கு எப்போதும் ஆதரவாகவே இருந்தார்கள். ராகுல் இவர்க ளோடும் சந்தித்து பேசும் போதும் சில வகுப்பு மாணவர்கள் தவறாகப் பேசினார்கள். அவ்வாறு இருந்த போதும்ரா குலுடனான நட்பை அவர்கள் வெறுக்கவில்லை. இப்படி இருக்கும் போது ராகுலுக்கும் சுவேத்தாவிற்கும் இடையேயான இந்தப் பிரச்சினையை

அப்பெண் தோழிகள் தீர்த்து வைக்க எண்ணினார்கள்...

தொடரும்....

## நவம்பர் 8ஆம் திகதி
# முதலாவது தமிழ் அகராதி உருவாக்கத் தினம்



பெரியசாமிப்பிள்ளை செல்வராஜ்
முன்னாள் ராஜதந்திரி

**"சாவில் தமிழ் படித்துச் சாக வேண்டும் என் சாம்பலும் தமிழ் மணந்து வேக வேண்டும்" என்ற மகத்தான வரிகளுக்கு உரித்தானவர் கவிஞர் க.சச்சிதானந்தன்.**

**மொழியின் பால் காணப்பட்ட ஈர்ப்புக்கும், உதிரத்துடன் கலந்த மொழிப் பற்றுக்கும், இதனை விட சிறந்ததொரு எடுத்துக்காட்டு இருப்பதாக எனக்கு தென்படவில்லை.**

சைகை ரீதியாக உதயமான மொழியானது, படிப்படியாக இனக்குழு அடையாளமாக மாறி, அதுவே இனத்தின் அடையாளமாகவும், வளர்ச்சி பெறத் தொடங்கியது.

மொழிகள் மனிதனின் உணர்வுகளை, கருத்துப் பரிமாற்றங்களை, எண்ணங்களை, சிந்தனைகளை, மேம்படுத்துவன.

மக்களின் வாழ்வியலை வெளிப்படுத்தக் கூடிய உயிர் நாடியாகவும் , அந்த இனத்தின் வரலாற்றை பறை சாற்றிக் கொண்டிருக்கும் மூலாதாரமாகவும், செயல்படும் மொழியானது, காலத்தால் அழியாத கருத்தாடல் மிக்க பொக்கிஷங்கள் ஆகும்.

பாதுகாக்கப்பட வேண்டியவைகள் மொழிகள். கால காலமாக வாழப் போகும் சந்ததியினருக்கு கடத்தி செல்ல வேண்டியதும், கடந்து வந்த சொற் களஞ்சியங்களை பேணிப் பாதுகாப்பதுவும், பல்வேறு புதிய சொற்களை உள்வாங்கி , அதனை அறிமுகப்படுத்துவதும், கலைக் களஞ்சியங்களை உருவாக்குவதும் மொழியை நேசிக்கும் அனைவரதும் கடமையாகும்.

இவ்வாறு மொழி வளம் பெறுவதற்கும், செழுமை அடைவதற்கும், நீடித்து நிலைத்து நிற்பதற்கும், அம்மொழியில் காணப்படுகின்ற அகராதிகளே முதன்மை காரணமாகின்றன.

அந்த வகையில் தமிழ் மொழி வளர்ச்சிக்கு அகராதிகளின் பங்களிப்பினைப் பற்றி விளக்குகிறது இக்கட்டுரை.

மொழியின் கடந்த கால நிலையையும், எதிர்கால நிலையையும் உற்று நோக்க, அகராதிகள் முக்கியமானவை.

இன்றைய தமிழ் சமுதாயம் எதிர் கொள்கின்ற மிகப் பெரிய சவாலாக அமைவது தமிழில் தவறில்லாமல் எழுதவும், பேசவும் ,

தெரியாத புதியதொரு தலைமுறையொன்று உருவாகி கொண்டிருப்பது தான்.

இத்தகையதொரு போக்கு மொழி வளர்ச்சியில் பாரிய தாக்கத்தினை ஏற்படுத்தக் கூடுமென்பது ஒரு எதிர்வு கூறல்.

எனவே , எம்மால் இயன்ற அளவு தமிழில் பேசுவது, பிழையில்லாமல் எழுதுவது என்பதனையும், தமிழுக்கு பல புதிய வார்த்தைகளை, சொற்களை அறிமுகப்படுத்தி செறிவூட்டுவதும் இன்றைய கால கட்டத்தின் தேவை.

அந்த தேவையினை நிறைவு செய்வதில் அகராதிகள் முதன்மை பெறுவதோடு, அவைகளது பயன்பாடுகளும், முக்கியத்துவம் வாய்ந்ததாகக் கருதப்படுகின்றது.

காலனித்துவ ஆட்சியின் பொழுது, தமது ஆட்சி, அதிகாரத்தினை விஸ்தரித்து, தமது இருப்பினை வலுப்படுத்தவும், தமது மதத்தினைப் பரப்பவும், வியாபாரத்தைப் பெருக்கவும் வந்தவர்கள் ஐரோப்பியர்கள்.

காலப்போக்கில் தமிழ் மொழியின் சிறப்பு , மாண்பு ஆகியன அவர்களது இதயத்தை ஈர்த்திருந்தது என்பது தான் ஆச்சரியப்படத் தக்கதொன்று.

தமிழ் மொழியின் பால் ஏற்பட்ட மோகத்தினால், அவர்கள் தமிழைப் பிழையறக் கற்றதுடன் நின்று விடாமல், இலக்கிய, இலக்கணங்களிலும் தேர்ச்சி அடையத் தொடங்கியது தான் ஆச்சரியம்.

எவ்வாறு ஐக்கிய அமெரிக்காவில் வாழ்ந்த அமெரிக்கர்களுக்காக , 'நோவா வெப்ஸ்டர்' என்பவரால் முதன் முதல் "வெப்ஸ்டர்" ஆங்கில அகராதி எழுதப்பட்டதோ, அதே போல தமிழகத்திலுள்ள தமிழ் பேசும் மக்களுக்காக ஒரு 'தமிழ் அகராதியினை' உருவாக்கிய பெருமைக்குரியவர் வீரமாமுனிவர்.

தமிழ் மொழியின் பால் கொண்ட காதலினால் தமிழுக்கென்று ஒரு முதல் அகராதியை எம்மவர்களுக்கு அறிமுகப்படுத்திய சான்றோன்!

கடல் கடந்த தேசத்திலிருந்து வந்து , கனவிலும் நினைத்துப் பார்க்க முடியாத உன்னதமான பங்களிப்பினை, தமிழ் மொழியின் வளர்ச்சிக்காக, அதனது மேம்பாட்டுக்காக தன்னையே அர்ப்பணித்துக் கொண்ட பெருந்தகை.

கீழைத்தேய நாடுகளில் காலனித்துவ, ஆட்சியாளர்களால் மத மாற்றமானது வேகமாக முன்னெடுக்கப்பட்டுக் கொண்டிருந்த காலகட்டமது.

மதத்தைப் பரப்பும் நோக்கில், 1710 ஆம் ஆண்டு தமிழகத்துக்கு வந்தவர் இத்தாலி நாட்டிலுள்ள கேசுதிகிலியோன் என்னும் இடத்தில் பிறந்த கான்ச்டன்டைன் சோசப்பு பெச்கி (Constantine Joseph Beschi) அவர்கள்

எந்தவொரு விடயமும் மக்களைச் சென்றடைய வேண்டுமானால் அது அவர்கள் சார்ந்த மொழிக்கு ஊடாகச் செல்ல வேண்டுமென அறிந்த அவர் ,

தமிழகத்திலுள்ள மக்களுக்கு அவர்கள் சார்ந்த மொழியான தமிழ் மொழி மூலம் மதத்தினைப் பரப்ப எத்தனித்தார்.

அந்த மதத்தினது தத்துவங்கள், அந்த மக்களின் தாய் மொழியான தமிழ் மொழி ஊடாக செல்வது அவசியம் என்ற உண்மையை உணர்ந்து, அதற்காக தமிழை முறைப்படி கற்றுக் கொண்ட இவர், தமிழ் மொழியில் காணப்பட்ட உயர்ந்த அம்சங்களை வியந்து, இலக்கணம், இலக்கியம், அகராதி படைத்து தமிழுக்கு பெருமை சேர்த்தார்.

மொழியின் பெயரால் ஈர்க்கப்பட்ட இவர், தமது பெயரினைக் கூட செந்தமிழில் 'வீரமாமுனிவர்' என மாற்றிக் கொண்டது வியப்பை ஏற்படுத்துகின்றது அல்லவா !

> **ஐக்கிய அமெரிக்காவில் வாழ்ந்த அமெரிக்கர்களுக்காக , 'நோவா வெப்ஸ்டர்' என்பவரால் முதன் முதல் "வெப்ஸ்டர்" ஆங்கில அகராதி எழுதப்பட்டதோ, அதே போல தமிழகத்திலுள்ள தமிழ் பேசும் மக்களுக்காக ஒரு 'தமிழ் அகராதியினை' உருவாக்கிய பெருமைக்குரியவர் வீரமாமுனிவர்**

மேற்கத்திய முறைப்படி அமைத்த முதல் தமிழ் அகராதியினை "சதுரகராதி" என்ற பெயரில் இவரால் 1732 ஆம் ஆண்டு, நவம்பர் 21ஆம் நாள் எழுதி முடிக்கப்பட்டது.

ஆயினும் 1824 ஆம் ஆண்டில் தான் சதுரகராதி முழுவதும் அச்சிடப்பட்டு வெளி வந்தது.

அகரவரிசைப்படி அட்டவணைப் படுத்தப்பட்ட ஒரு மொழியின் சொற்களையும், அவற்றுக்கான பொருளையும், சில சமயங்களில் அச் சொற்கள் தொடர்பான வேறு பல விவரங்களையும் கொண்டுள்ள நூலை 'அகரமுதலி' அல்லது 'அகராதி' என்பர்.

தமிழகத்தின் பல்வேறு பகுதிகளுக்கும் சென்று , இலக்கியச் சுவடிகளைப் தேடி எடுத்ததால் இவரை

"சுவடி தேடும் சாமியார்" எனவும் அழைத்தனர்.

மேலைத்தேய நாட்டினருக்கும் தமிழின் பெருமையை உணர்த்த வேண்டும் என்பதற்காக திருக்குறள், தேவாரம், திருப்புகழ், நன்னூல், ஆத்திசூடி போன்ற நூல்களை பிற ஐரோப்பிய மொழியில் வெளியிட்டது இவரது புலமையை வெளிப்படுத்துகின்றது.

தமிழ் - லத்தீன் அகராதியை உருவாக்கி, அதில் 1000 தமிழ் சொற்களுக்கு லத்தீன் மொழி மூலமாக விளக்கம் அளித்திருந்தார்.

இதுவே முதல் தமிழ் அகரமுதலி ஆகும்.

பின்பு 4400 சொற்களைக் கொண்ட தமிழ் போர்த்துக்கேய அகராதியை உருவாக்கினார்.

இந்த அகராதிகள் வெளி நாட்டைச் சேர்ந்தவர்கள் தமிழ் கற்கவும், தமிழர்கள் பிற மொழிகளைக் கற்கவும் பெரிதும் உறுதுணையாக இருந்தமை இதனது சிறப்பம்சம்.

சதுரகராதியை, நிகண்டுக்கு ஒரு மாற்றாகக் கொண்டு வந்தார்.

இருபத்து மூன்று நூல்களைத் தமிழில் எழுதியிருந்தார்.

"தேம்பாவணி" என்ற பெருங்காவியத்தினை இயற்றியது இவரின் தமிழ்ப் புலமைக்கு ஒரு சிறந்த எடுத்துக் காட்டு.

தொன்னூல் விளக்கம் என்ற நூலில் எழுத்து, சொல், பொருள், யாப்பு, அணி ஆகிய ஐந்து இலக்கணங்களைத் தொகுத்தார்.

உரைநடையில் வேத விளக்கம், வேதியர் ஒழுக்கம், ஞானக் கண்ணாடி, செந்தமிழ் இலக்கணம், வாமன் கதை, காவலூர் கலம்பகம், ஆகியவற்றைப் படைத்தார்.

தமிழின் முதல் நகைச்சுவை இலக்கியம் என்று போற்றப்படும் 'பரமார்த்த குருவின் கதை' நூலைப் படைத்ததும் இவரே.

இவர் பிறந்தது எட்டாம் திகதி நவம்பர் மாதம் 1680 ஆம் ஆண்டு.

எனவே தான் , அவர் பிறந்த திகதியினை "தமிழ் அகராதி தினமாக" தமிழக அரசு கொண்டாடுகின்றது.

தமிழ் பேசும் நல்லுலகத்திற்கு முக்கியத்துவம் வாய்ந்த ஒரு தினம் நவம்பர் மாதம் எட்டாம் திகதி!

அது தான் தமிழ் அகராதி தினம்.

இதே போல, ஐக்கிய அமெரிக்காவில் நோவா வெப் ஸ்டார் அவர்களின் பிறந்த தினமான அக்டோபர் 16 ஆம் திகதியை "தேசிய அகராதி தினம்" எனக் கொண்டாடப்படுகின்றது.

அகராதியின் முக்கியத்துவத்தினை உணர்த்தும் வகையில், அகராதியினை எவ்வாறு பயன்படுத்த வேண்டும் என்ற பயிற்சி நெறியினை பாடசாலைகள் தமிழ் அகராதி தினத்திலாவது பாடசாலை மாணவர்களுக்கு எடுத்துரைப்பது அவசியம்.

மாணவர்களுடைய சொல்வாண்மையினை, சொல்லாட்சியினை, அதிகரிப்பதற்கு புதிய வார்த்தைகள், அது போல அது சம்பந்தமான பயிற்சிகள் அவசியம் !

துரதிஷ்டவசமாக இவ்வாறான நிகழ்வுகள் இன்றைய கால கட்டத்தில் நடைபெறுவது மிகவும் குறைவாக உள்ளது என்பது தான் கவலைக்குரிய விடயம் .

இன்றும் கூட பொது இடங்களில் , மக்கள் நடமாடும் இடங்களில், பேருந்துகளில், மார்க்கப் பயணப் பலகைகளில் எழுதப்பட்டிருக்கும் தமிழ் எழுத்துக்களின் இலக்கணப் பிழைகளானது , அதனது கருத்தினையே மாற்றி விடுவது மட்டுமல்லாது, சில வேளைகளில் தவறான அர்த்தங்களையும் தந்து விடுகின்றதானது மனதிற்கு வருத்தத்தைத் தருகின்றது.

பொதுமக்கள் கூட இவ்வாறான பிழைகளைக் காணும் பொழுது

" தமக்கேன் சோழி " என்று எண்ணாமல் உரிய அதிகாரிகளிடம் அதனை எடுத்துக் கூறினால் நிச்சயமாக அவர்கள் செவிமடுக்கக் கூடிய

நிலையில் இருப்பார்களென எண்ணலாம்.

தமிழ் அகராதி தினத்தில், தமிழுக்கு வலு சேர்க்கக் கூடிய விதத்தில் கற்றறிந்த அறிஞர்கள் புதுப் புது சொற்களை இணைக்கும் பொழுது மொழி வளரும். அதனது பயன்பாடு பெருகும். அதனூடாக ஒரு இனத்தின் அடையாளம் உறுதிப்படுத்தப்படும்.

" தமிழுக்கும் அமுதென்று பேர்
அந்தத் தமிழ் இன்பத் தமிழ் எங்கள் உயிருக்கு நேர் உயிருக்கு நேர் " என்றார் கவிஞர் பாரதிதாசன்

"பிறநாட்டு நல்லறிஞர் சாத்திரங்கள்
தமிழ் மொழியிற் பெயர்த்தல் வேண்டும். இறவாத புகழுடைய புதுநூல்கள்
தமிழ் மொழியில் இயற்றல் வேண்டும்.
மறைவாக நமக்குள்ளே பழங்கதைகள்
சொல்லுவதிலோர் மகிமை யில்லை.
திறமான புலமையெனில் வெளிநாட்டோர்
அதை வணக்கஞ் செய்தல் வேண்டும்".

என்றார் மகாகவி சுப்பிரமணிய பாரதியார்.

பாரதியாரின் கனவு நிறைவேற, பிற நாடுகளில் வசிக்கும் தமிழ் மக்கள், தமிழ் மொழியின் சிறப்பினை, பெருமையினை, தாம் வதியும் நாடுகளில் உள்ள மக்களுக்கு எடுத்துச் சொல்வதன் மூலமும், எமது மொழியான செம்மொழியினை வளர்க்க முடியும் என்பது ஒரு நம்பிக்கை,

தமிழை நேசிப்போம்
தமிழ் மொழியை வளர்ப்போம்

# Prime Lands

# இரண்டு விருதுகளை சுவீகரிப்பு




Prime Lands (Pvt) Ltd,தாய்லாந்தில் அண்மையில் நடைபெற்ற வேர்ள்ட் பிஸ்னஸ் அவுட்லுக் விருதுகள் 2024 இல் இரண்டு விருதுகளை சுவீகரித்துள்ளது. இலங்கையில் ஆண்டின் சிறந்த ரியல் எஸ்டேட் நிறுவனம் 2024 மற்றும் நிறுவனத்தின் புதிய நிர்மாணத் திட்டமான YOLO க்காக, இலங்கையின் ஆண்டின் சிறந்த ரியல் எஸ்டேட் செயற்திட்டம் 2024 ஆகிய விருதுகளை Prime Lands (Pvt) Ltdநிறுவனம் சுவீகரித்துள்ளது. இந்த விருதுகளினூடாக, புத்தாக்கம், சிறப்புக்கான ஈடுபாடு மற்றும் உலகத் தரம் வாய்ந்த நியமங்களை பேணுதல் போன்றவற்றினூடாக ரியல் எஸ்டேட் துறையில் புரட்சிகரமான மாற்றத்தை ஏற்படுத்தி வரும் Prime Lands' இன் அர்ப்பணிப்பு பிரதிபலிக்கப்பட்டுள்ளது.

Prime Lands இன் ஸ்தாபகரும் குழும தவிசாளருமான பிரேமலால் பிராஹ்மனகே கருத்துத் தெரிவிக்கையில், "இலங்கையின் ரியல் எஸ்டேட் துறையில் முன்னோடி எனும் வகையில், பாரம்பரிய வரையறைகளுக்கு அப்பாலான வசிப்பிட அனுபவங்களை ஏற்படுத்துவதில் Prime Lands எப்போதும் நம்பிக்கை கொண்டிருந்தது. செங்கற்கள் மற்றும் சாந்துக் கலவையைக் கொண்டு கட்டிடங்களை நிர்மாணிப்பதற்கு என்பதற்கு அப்பால் சென்று, கனவுகளுக்கான அடித்தளங்களை ஏற்படுத்தல், எதிர்பார்ப்புகளின் அரண்களை கட்டியெழுப்பல் மற்றும் எமது பிரத்தியேகமான வாடிக்கையாளர்களுக்கு வரையறைகளில்லாத வாய்ப்புகளுடனான கூரைகளை உருவாக்கல் போன்றவற்றில் எமது மூலோபாய தீர்மானம் தங்கியுள்ளது. தொழிற்துறையில் எம்மை அசல் நியமங்களை ஏற்படுத்துவோராக எம்மை நிலைநிறுத்துவதில் இந்த நோக்கு கைகொடுத்துள்ளதுடன், இலங்கையின் ரியல் எஸ்டேட் கட்டமைப்பை மாற்றியமைப்பதுடன், ஒப்பற்ற பெறுமதியை தொடர்ச்சியாக ஏற்படுத்திக் கொடுப்பதில் பங்களிப்பு வழங்குகின்றது." என்றார்.





மூன்று தசாப்தகாலமாக, நம்பிக்கையை வென்ற நிர்மாண வடிவமைப்பாளராக Prime Lands தொழிற்துறையில் முன்னிலையில் திகழ்வதுடன், வாடிக்கையாளர்களின் எதிர்பார்ப்புகளை விஞ்சுதல் மற்றும் வாக்குறுதிகளை நிறைவேற்றுதல் போன்றவற்றை தொடர்ந்தும் நிறைவேற்றுவதற்காக புகழ்பெற்றுள்ளது. நீடித்து நிலைத்திருக்கும் மரபுவழியை உருவாக்குவதுடன், சொகுசு. அதிசொகுசு. ஓய்வு மற்றும் வாழ்க்கைமுறை வசிப்பிடங்களை, தனது புரட்சிகரமான செயற்திட்டங்களினூடாக Prime Lands மாற்றியமைத்துள்ளது. இலங்கையில் நவீன இல்லத் தொடர்மனை நகரங்களை நிறுவும் நிலைக்கு நிறுவனம் வளர்ச்சியடைந்துள்ளதுடன், எதிர்கால தலைமுறைகளுக்கு வசிக்கக்கூடிய, அரவணைப்பான அயலவர் சூழலை உருவாக்கிய வண்ணமுள்ளது.

மேலும், அலங்கார வடிவமைப்பு மற்றும் பலதுறைசார் நிபுணத்துவம் போன்றவற்றில் Prime Lands உயர் நியமங்களை நிறுவுவதுடன், ரியல் எஸ்டேட் முதலீட்டில் அணுகல் திறனை ஏற்படுத்தியுள்ளது. வட்டியில்லாத 1% மாதாந்த தவணைமுறை செலுத்தும் திட்டங்கள் போன்ற புத்தாக்கமான நிதியளிப்பு தெரிவுகளைக் கொண்டு, முதல் தடவை வீடொன்றின் உரிமையாளராக திகழ்வோருக்கு உயர் தர ரியல் எஸ்டேட்டை பெற்றுக் கொள்ள Prime Lands வாய்ப்பளிப்பதுடன், முதலீட்டாளர்களுக்கு கவர்ச்சிகரமான வருமதிகளையும் பெற்றுக் கொடுக்கின்றது.

ரியல் எஸ்டேட் துறையில் தூர நோக்குடைய முன்னோடியாக அறியப்படும் Prime Lands,சர்வதேச நியமங்களை எய்தியுள்ளதுடன், அதன் ஒப்பற்ற தரம் மற்றும் நம்பிக்கை போன்றவற்றுக்காக பெறுமதியாக கருதப்படுகின்றது. துறையில் நிறுவனத்தின் செல்வாக்கு செலுத்தும் நிலையை இந்த வேர்ள்ட் பிஸ்னஸ் அவுட்லுக்கு இரட்டை விருதுகள் மேலும் உறுதி செய்துள்ளன. நாட்டின் பல வடிவமைப்பாளர்கள் துணிகரமான நகர்வுகளை மேற்கொள்வதற்கு தயங்கிய காலப்பகுதியிலும், நியமங்களை Prime Lands சவால்களுக்கு உட்படுத்தி, YOLO போன்ற செயற்திட்டங்களை வெற்றிகரமாக முன்னெடுப்பதுடன், இலங்கையின் ரியல் எஸ்டேட் துறையில்வெற்றிகரமான அடையாளமாக அதனை நிறுவிவருகின்றது.

Prime Lands இன் இணை தலைமை அதிகாரி சந்தமினி பெரேரா கருத்துத் தெரிவிக்கையில், "இலங்கையின் ரியல் எஸ்டேட் துறையில் புதிய நியமங்களை ஏற்படுத்துவோர் எனும் வகையில், பெருமளவில் பேசப்படாத, கவனம் செலுத்தப்படாத மற்றும் அதிகம் அணுகப்படாத எமது வாடிக்கையாளர்களின் ஆழமான எதிர்பார்ப்புகள் , கனவுகளை புரிந்து கொண்டு அவற்றை நிறைவேற்றும் ஆற்றலை நாம் கொண்டுள்ளோம். அந்த கனவுகளை நாம் நனவாக்கியிருந்தமையை உறுதி செய்யும் வகையில் இந்த கௌரவிப்பு அமைந்துள்ளது. எதிர்காலத்தை நோக்குகையில், இலங்கைக்கு அப்பால் நாம் இயங்க எதிர்பார்க்கின்றோம். சர்வதேச ரியல் எஸ்டேட் முன்னோடியாக நாம் தற்போது காலடி பதிப்பதுடன், அதே பெறுமதி, புத்தாக்கம் மற்றும் சிறப்பை ரியல் எஸ்டேட் அபிவிருத்தித் திட்டங்களை ஏற்படுத்திய வண்ணமுள்ளோம்." என்றார்.

## பெண் தொழில்முயற்சியாளர்களுக்கான

# பங்களிப்பை அதிகரிக்கும் கொமர்ஷல் வங்கி

2024 ஆம் ஆண்டில் கொமர்ஷல் வங்கியிடமிருந்து பெண் தொழில் முயற்சியாளர்கள் சிறப்பு கவனத்தைப் பெற்றுள்ளனர், இந்த முக்கியமான வாடிக்கையாளர் பிரிவுடன் தொடர்ச்சியான செயல்பாடுகள் மூலம் வங்கி அதன் நேரடி ஈடுபாட்டை முன்னெடுத்துள்ளது. இதில் தொழில் முயற்சியாளர் அபிவிருத்தி திட்டங்கள், வெள்ளவத்தையில் உள்ள வங்கியின் DigiZone இல் டிஜிட்டல் வங்கியியல் தொடர்பான பயிற்சி திட்டங்கள் மற்றும் ஸ்ரீ ஜயவர்த்தனபுர பல்கலைக்கழகத்தின் முதுகலைப் பட்டதாரி முகாமைத்துவ நிறுவகத்துடன் (PIM) இணைந்து முன்னெடுக்கப்படும் பெண் தொழில்முயற்சியாளர்களுக்கான பிரத்தியேக SME திறன் அபிவிருத்தி தொடர்பான பல சான்றிதழ் கற்கைநெறிகளும் அடங்கும்.




இந்த திட்டங்களுக்கு 'கொமர்ஷல் வங்கியினால் பெண் வாடிக்கையாளர்களுக்கு பிரத்தியேகமாக வடிவமைக்கப்பட்ட வங்கியியல் தயாரிப்பு மற்றும் சேவைகள் பிரிவான அணகி ஆதரவு வழங்கியது. இந்த பிரிவில் 'அணகி மகளிர் சேமிப்புக் கணக்கு', 'சிறிய மற்றும் நடுத்தர பெண் தொழில் முயற்சியாளர்களுக்கான அணகி வர்த்தகக் கடன்' (WSME) மற்றும் பெண்களை வலுப்படுத்துவதற்கும் பங்களிப்பினை வழங்குவதற்கும் மற்றும் அவர்களின் விரிவாக்கத்திற்கு உதவும் வகையில் வடிவமைக்கப்பட்ட நிதியியல் அல்லாத நன்மைகள் உள்ளடங்கலான பிற தயாரிப்புகள் மற்றும் சேவைகளும் அடங்கும்.

2024 இல் பெண் தொழில்முயற்சியாளர்களுடனான வங்கியின் சில செயற்பாடுகள் இங்கே படத்தில் உள்ளன.

# Track 143

## காத்திருப்பு அவர்களுக்கு புதிதல்ல



தருமலிங்கம் லுகிர்தா,
ஊடக கற்கைகள் துறை,
யாழ். பல்கலைக்கழகம்.

**இந்தத் திரைப்படமானது யுத்த வடுக்களைச் சுமக்கும் மக்களுக்காக குறிப்பாக எம்மவர்களின் தியாகத்தையும், உச்ச கட்ட துயரின் வலிமையினையும் நினைவூடுவதற்காக சமர்ப்பணம் செய்யப்படுகிறது.**

இந்தத் திரைப்படம் ஆனது உலகின் பல பகுதியில் நடந்த போர்களைப் பற்றி பேசும் ஒரு சோடிப்பாக இல்லாத ஒரு முக்கிய தலைப்பினை கொண்டு அமைந்துள்ளது. பார்வையாளர்களுக்கு போர்க்கால அனுபவங்களின் வலி, நம்பிக்கை மற்றும் சகிப்புத்தன்மைக்கு ஒரு சாளரத்தை வழங்குகிறது. ஈரானிய பெண்களையும் அவர்களின் தியாகங்களையும் அவர்களின் மனவலிமையினையும் அவர்களை தியாகிகளாகவும் மனக்கண்முன்னே கொண்டு வந்துள்ளார் இயக்குனர் நர்கஸ் அபியர், இக்கதைக்கு இன்றும் சான்றாக உள்ள எம் ஈழத்தின் தியாகம் தலைவணங்கத் தக்கதே.

Track 143 எனும் இத் திரைப்படமானது நர்கஸ் அபியர் இயக்கத்தில் 2014 ஆம் ஆண்டு வெளியிடப்பட்ட ஈரானிய மொழியிலமைந்த ஈரானிய திரைப்படமாகும்.

இத் திரைப்படத்தின் கதையாக போருக்கு சென்று காணாமல் போன மகனை தேடும் தாயின் பரிதாப நிலையினை எடுத்துக்காட்டுவதாகவும், தாய் தன் மகனைப் பற்றிய தகவலை அறிந்து கொள்ள போராடி இறுதியில் மகனை கண்டு கொள்கிறாளா? இல்லையா? என்பதை வெளிப்படுத்துவதாக இது அமைந்துள்ளது.

இக்கதையின் பிரதான கதாபாத்திரமாக மகனைத் தேடும் தாய் ஓல்ஃபட் என்பவரும் துணை பாத்தரங்களாக அவரது சகோதரி, தந்தை, பாட்டி போன்றவர்களும் காணப்படுகின்றனர். எதிர்பாத்திரமாக ஈரான்-ஈராக்குடனான 8 ஆண்டுகால போர்ச்சூழல் காணப்படுகிறது.

ஆரம்பத்தில் மகன் போருக்கு செல்வதை விரும்பாமல் தடுக்கும் தாய் மகன் இல்லாமல் தனியே தவிப்பதையும், அன்றாட கடமைகளை மேற்கொள்வதற்கு சிரமப்பட்டு பயணிப்பதையும், போருக்குச் சென்று திரும்பி வரும் வீரர்களிடம் தனது மகனைப் பற்றி விசாரிப்பதையும், தனது முதுகில் வானொலியை கட்டி சுமந்து திரியும் தாயின் மன வலிமையையும் பேசுவதாக இத்திரைப்படத்தில் காண்பிக்கப்படுகின்றன. தாயின் உணர்வுகளையும், சூழலையும் காண்பிப்பதற்கு closeup shots , Medium shots அதிக இடங்களில் எடுக்கப்பட்டுள்ளது. இயற்கையான ஒலியினை பிரயோகிப்பதனூடாக பார்வையாளர்களை யதார்த்தத்துடன் இணைத்து வைத்திருப்பதாக இத்திரைக்கதை அமைகிறது. "டிராக் 143", தியாகம், நம்பிக்கை மற்றும் சகிப்புத்தன்மை உள்ளிட்ட போர்க்கால அனுபவத்திற்கு மையமான பல கருப்பொருள்களை கொண்டுள்ளது. விதியின் நிச்சயமற்ற தன்மையுடன் அவள் போராடும்போது, நம்பிக்கை, விரக்தி மற்றும் பின்னடைவு ஆகியவற்றின் மூலம் தாயின் பயணத்தை படம் ஆராய்கிறது. பின்தங்கியவர்கள் மீது போரின் உணர்ச்சி மற்றும் உளவியல் தாக்கங்களை வலியுறுத்தும் விதத்தில் கதை விரிவடைகிறது, தெரியாதவர்களுடன் வாழும் அன்றாட சவாலை எதிர்கொள்ளும் தனிநபர்களின் தனிப்பட்ட தியாகங்கள் மற்றும் நீடித்த மனப்பான்மையை எடுத்துக்காட்டுகிறது.


படத்தின் முதன்மைக் கருப்பொருள்களில் ஒன்று காத்திருப்பு பற்றிய யோசனையும், விட்டுச் சென்றவர்கள் மீது அது திணிக்கும் உணர்ச்சிக் கஷ்டமும் ஆகும். போர்க்காலத்தில் பலர் அனுபவிக்கும் நிச்சயமற்ற தன்மை மற்றும் கவலையின் பரந்த உணர்வைக் குறிக்கிறது. இந்தத் திரைப்படம் தனிப்பட்ட தியாகத்தின் கருத்தையும் ஆராய்கிறது. ஓல்ஃபட் இன் அனுபவங்கள் மூலம், தனிப்பட்ட வாழ்க்கை மற்றும் உறவுகளின் மீதான போரின் விளைவை கருத்தில் கொள்ள வைக்கிறது. ஓல்ஃபட்டின் அன்றாடப் போராட்டங்கள் மற்றும் முரண்பாடுகள் இருந்தபோதிலும் நம்பிக்கையைத் தக்கவைக்க அவள் எடுக்கும் முயற்சிகள் ஆகியவை மனித மோதலின் விளைவை ஒரு சக்திவாய்ந்த நினைவூட்டலாகச் செயல்படுகின்றன.


நர்கஸ் அபியரின் 2014 திரைப்படம் "டிராக் 143" தனிநபர்கள் மற்றும் குடும்பங்கள் மீதான போரின் உணர்ச்சி மற்றும் உடல் ரீதியான பாதிப்பை ஒரு கடுமையான மற்றும் கிளர்ச்சியூட்டும் சித்தரிப்பை வழங்குகிறது. ஈரான்-ஈராக் போரின் பின்னணியில் அமைக்கப்பட்டுள்ள இப்படம், நேசிப்பவர் மோதலின் பிடியில் சிக்கிக் கொள்ளும் போது விட்டுச் சென்றவர்களின் தனிப்பட்ட தியாகங்கள் மற்றும் பின்னடைவை கூறுகிறது. கதை கூறலானது Nonlinear முறையில் அமைகிறது. கடந்த காலத்தை பேசுவதாக ஆரம்பித்து இறுதியில் நிகழ்காலத்தை நிறுவுவதற்காக நேர்காணலை உத்தியாக பயன்படுத்தியுள்ளார் இயக்குனர். இந்த திரைப்படத்தின் Conflict என்பது மனிதனுக்கும் சமூகத்திற்கும் (Human vs Society ) சூழல் ஆகும்.

திரைப்படத்தின் களமானது வீடு, நேர்காணல் நடத்தப்படும் இடம், மகனை தேடி அலையும் இடங்களாக அமைகிறது. திரைப்படத்தின் Climax/ Plot என்பது இறந்து போன மகனின் ஆடைகள் மாத்திரம் வீட்டிற்கு வருதல் என்பதில் ஆரம்பிக்கிறது. இங்கு ஆடைகள் குறியீடாக பயன்படுத்தி மகன் உயிரோடு இல்லை என்பதை உணர்த்துகிறது. இத்திரைப்படமானது War film, Melodrama சார்ந்த இயல்புகளை வெளிப்படுத்தும் திரைப்படமாகும்.

திரைப்படத்தில் Colour effect இனைப் பொறுத்தவரையில் Light green நிறத்துடன் சேர்ந்த Black and lwite நிறமே பயன்படுத்தப்பட்டுள்ளது. அத்துடன் இப்படத்தில் பின்னணி இசையோ அல்லது பாடல்களோ இடம்பெறவில்லை. நர்கஸ் அபியரின் இயக்கம் உணர்திறன் மற்றும் நுண்ணறிவு. படத்தின் ஒளிப்பதிவு, வண்ணம் மற்றும் ஒளியை கவனமாகப் பயன்படுத்துவதன் மூலம் வகைப்படுத்தப்படுகிறது, இது கதையின் உணர்ச்சிகரத்தை அதிகரிக்கிறது. ஒலியடக்கப்பட்ட டோன்கள் மற்றும் லைட்டிங் ஆகியவற்றின் தேர்வு சூழ்நிலையின் ஈர்ப்பை திறம்பட வெளிப்படுத்துகிறது, அதே சமயம் கதாபாத்திரங்களின் உள் போராட்டங்களையும் பிரதிபலிக்கிறது. அபியரின் கவனம் ஒவ்வொரு பிரேமிலும் தெளிவாகத் தெரிகிறது, ஓல்ஃபட் முகத்தின் நெருக்கமான காட்சிகள் முதல் பரந்த நிலப்பரப்புகள் வரை. கதைக்கு களம் அமைத்தது அரசியல் மற்றும் தனிப்பட்ட விஷயங்களை சமன் செய்யும் இயக்குனரின் திறமை கதை சொல்லும் திறமைக்கு சான்றாகும். "டிராக் 143" இன் காட்சி அமைப்பு கதையை ஆதரிப்பது மட்டுமல்லாமல், கதாபாத்திரங்களின் அனுபவங்களுடனான பார்வையாளரின் தொடர்பை ஆழமாக்குகிறது.





திரைப்படத்தின் இறுதி முடிவானது தாய் ஓல்ஃபட்டுக்கு மகன் யோனோசின் உடல் கண்டுபிடிக்கப்பட்டு எலும்புக்கூடுகள் ஒரு சவப்பெட்டியில் அடைக்கப்பட்ட நிலையில், ஈரானிய கொடியினால் மூடி கொடுக்கப்படுகிறது. ஒரு குழந்தையை கையால் தூக்கி அணைத்துக்கொள்வதைப் போல அந்த எலும்புகளை தூக்கி தன்னுடன் ஆரத் தழுவிக் கொள்ளும் வகையில், அவளுடைய மகன் பற்றிய தேடலுக்கு அவளுக்கு இறுதியில் அவள் மகனுடைய எலும்புக்கூடுகளே கிடைப்பதாக சோகமான முடிவுடன் அமையும் Close ending திரைப்படமாக இது அமைகிறது.

இந்த திரைப்படத்தின் தலைப்பின் பொருத்தப்பானது ஓல்பட்டின் மகன் ஜோனாசினுடைய உடல் கண்டெடுக்கப்பட்ட இடமாக தடம் 143 என்பது காணப்படுகிறது. "தடம் 143" இல் சின்னமும் ஒரு முக்கிய அங்கமாகும். பெயரிடப்பட்ட "தடம்" என்பது ஒரு ரயில் பாதையைக் குறிக்கிறது, இது காத்திருப்பு மற்றும் காலத்தின் பயணத்திற்கான உருவகமாக மாறும். இது நிச்சயமற்ற வாழ்க்கையின் தொடர்ச்சியான மற்றும் அடிக்கடி கடினமான செயல்முறையை பிரதிபலிக்கிறது, அத்துடன் தீர்மானம் மற்றும் மீண்டும் இணைவதற்கான நம்பிக்கையையும் குறிக்கிறது.

இத்திரைப்படமானது மூன்றாம் கண் நாவலின் திரைத்தழுவலாக அமைவதோடு, ரசிகர்களுக்கு பிடித்த சிறந்த படத்துக்கான கிறிஸ்டன் பீனிக்ஸ் விருதையும் பெற்றுக் கொண்டமை சிறப்பிற்குரிய விடயமாகும்.

இறுதியில் மாத்திரம் தாலாட்டு பாடலுடன் படம் முடிவடைகிறது. இந்திய திரைப்படங்களில் அனேகமான இடங்களில் இடம்பெறுவதைப் போன்ற பிரம்மாண்டமான படைப்புகள் இத் திரைப்படத்தில் இல்லாத போதும் தாய் மகன் கதாபாத்திர வடிவமைப்புகள் திரைப்படத்திற்குள்ளே மூழ்கி போக செய்கின்றன.



# மூத்த நடிகர் டெல்லி கணேஷ் காலமானார்

வயது முதிர்வு மற்றும் உடல்நலக்குறைவு காரணமாக நடிகர் டெல்லி கணேஷ், ஞாயிற்றுக்கிழமை (10) காலமானார். இறக்கும் போது அவருக்கு வயது 80. சென்னை ராமாபுரத்தில் உள்ள அவரது இல்லத்தில் அவரது உயிர் பிரிந்தது.




டெல்லி கணேஷின் உடல் பொதுமக்கள் அஞ்சலிக்காக அவரது வீட்டில் வைக்கப்பட்டுள்ளது. டெல்லி கணேஷின் மறைவுக்கு திரைத்துறையை சேர்ந்த பலரும் சமூக வலைதளங்களில் இரங்கல் தெரிவித்து வருகின்றனர்.


நாடக நடிகராக இருந்து தமிழ் திரையுலகில் வில்லன் மற்றும் குணச்சித்திர கதாபாத்திரங்களில் டெல்லி கணேஷ் கோலோச்சியுள்ளார். டப்பிங் கலைஞராகவும் சிறந்து விளங்கி வந்தார். தூத்துக்குடியில் பிறந்த இவர் தமிழ், தெலுங்கு, மலையாளம் மற்றும் கன்னடம் ஆகிய மொழிகளிலும் நடித்துள்ளார். டெல்லி கணேஷ். நகைச்சுவை, குணச்சித்திரம் உள்ளிட்ட பல்வேறு கதாபாத்திரங்களில் திறம்பட நடித்தவர் ஆவார்.


டெல்லி கணேஷ் 1976-ல் திரைத்துறைக்கு வந்தார். இவர் தக்ஷிண பாரத நாடக சபா (DBNS) எனப்படும் 'டெல்லி' நாடகக் குழுவில் ஒரு உறுப்பினராக இருந்தார். படங்களில் நடிப்பதற்கு முன் 1964 முதல் 1974 வரை இந்திய விமானப்படையில் டெல்லி கணேஷ் பணியாற்றினார்.

டெல்லி கணேஷ் நடித்து வெளியான முதல் திரைப்படம் பட்டினப்பிரவேசம் (1977), தமிழ் திரையுலகுக்கு இவரை இயக்குனர் கே. பாலசந்தர் தான் அறிமுகம் செய்தார். டெல்லி கணேஷ் நடித்த பெரும்பாலான கதாபாத்திரங்களில் துணை நடிகர் அல்லது நகைச்சுவை நடிகர் வேடங்களே இருந்தது. ஆனால் அபூர்வ சகோதரர்கள் (கதாபாத்திரம்- பிரான்சிஸ்) போன்ற சில படங்களில் வில்லனாகவும் நடித்து கவனம் ஈர்த்தார். சிந்து பைரவி, நாயகன், மைக்கேல் மதன காமராஜன், அபூர்வ சகோதரர்கள், ஆஹா, தெனாலி, சங்கமம், அவ்வை சண்முகி, இந்தியன் 2 உள்பட 400-க்கும் மேற்பட்ட படங்களில் நடித்து கவனம் ஈர்த்தவர்.

டெல்லி கணேஷ் இதுவரை 8 முக்கிய சின்னத்திரை தொடர்களில் நடித்துள்ளார். 1979ம் ஆண்டு பசி திரைப்படத்திற்கு "தமிழ்நாடு மாநில அரசின் சிறந்த நடிகருக்கான விருதை பெற்றுள்ளார். அதோடு, 1993 - 1994ம் ஆண்டிற்கான தமிழ்நாடு மாநில அரசின் "கலைமாமணி விருது"ம் டெல்லி கணேஷ் பெற்றுள்ளார்.





# சிறுவர்களின் கையில் தவழும் அலைபேசிகள்




ஜெ.மங்கலா தர்ஷனி
இரண்டாம் வருடம்
ஊடக கற்கைகள் துறை,
யாழ்.பல்கலைக்கழகம்.

"சென்ற இடத்தால் செலவிடா தீதொரீஇ நன்றின்பால் உய்ப்ப தறிவு" மனதை குறிக்கோளில்லாமல் தடுமாற விடாமல், தீமையானதிலிருந்து நீக்கிக் காத்து நன்மையானதில் செல்லவிடுவதே அறிவாகும். இதற்கமைய அலைபேசிகள் (மொபைல் போன்கள்) நவீன சமூகத்தில் மாற்றமளிக்கும் ஒரு சாதனமாகும். இன்றைய உலகில் அலைபேசிகளின் பரவலான பயன்பாடு அனைவரையும் உற்று நோக்க வைக்கிறது. தகவல் தொழில்நுட்பம் உலகமெங்கும் வளர்ச்சி கொண்டதால், அலைபேசிகளின் பயன்பாடு ஒரு அன்றாட வாழ்க்கையின் அங்கமாகவும் மாறியுள்ளது. அதுவும் குறிப்பாக சிறுவர்களின் வாழ்க்கையில் அலைபேசிகள் மிகுந்த தாக்கத்தை ஏற்படுத்துகின்றன.

தகவல் அறிந்த மக்களுக்கு பரந்த வாய்ப்புகளை வழங்குவதுடன், அந்த சாத்தியக்கூறுகளை முறையாக பயன்படுத்தாதபோது இதன் நன்மைகளுக்கு மாறாக தீமைகளையும் ஏற்படுத்துகிறது. சிறுவர்கள் மத்தியில் அலைபேசி பயன்பாடு அதிகரித்து, அவர்களுடைய ஆரோக்கியத்தில், நற்பண்புகளில், கல்வித் திறன்களில் பெரும் தாக்கங்களை ஏற்படுத்தி வருகிறது. உலகளவில் நடக்கும் ஆய்வுகள், இந்த அலைபேசி பாவனையின் ஆழ்ந்த தாக்கத்தை வெளிப்படுத்துகின்றன.

2024ம் ஆண்டு குழந்தைகள் மூலம் தகவல் மற்றும் தகவல் தொடர்பு தொழில்நுட்ப பயன்பாடு குறித்த கணக்கெடுப்பில் அலைபேசிகளை பயன்படுத்திய குழந்தைகளின் சதவீதம் 76.1 ஆக இருக்கிறது. அலைபேசிகள் உபயோகத்தின் விகிதத்தை வயதுக்குட்பட்டவர்கள் அடிப்படையில் ஆய்வு செய்தபோது, 6-10 வயதுக்குட்பட்ட குழந்தைகளுக்கான சதவீதம் 66.3 ஆக இருக்கிறது, 11-15 வயதுக்குட்பட்ட குழந்தைகளுக்கான சதவீதம் 86.2 ஆக இருக்கிறது.

2021 ஆம் ஆண்டில் குழந்தைகளுக்கான இணையப் பயன்பாடு 82.7 சதவீதமான இருந்து, 2024 இல் அது 91.3 சதவீதமாக உயர்ந்தது. குழந்தைகளில் 42.9 சதவீதமானோர் வார நாட்களில் கிட்டத்தட்ட இரண்டு மணிநேரம் அல்லது அதற்கு மேல் இணையத்தில் செலவழிப்பதையும், வார இறுதி நாட்களில் 53.6 சதவீதமானோர் இணையத்தில் செலவழிப்பதையும் அவதானிக்க முடிகிறது. 66.1 சதவீதமான குழந்தைகள் சமூக ஊடகங்களைப் பயன்படுத்துகின்றனர். 96.3% குழந்தைகள் YouTube ஐப் பயன்படுத்துகின்றனர்.

32.6 சதவீதமான குழந்தைகள் ஒவ்வொரு அரை மணி நேரத்திற்கும் தங்கள் அலைபேசிகளை சரி பார்க்கின்றனர்.

2024ம் ஆண்டுக்கான GITNUX அறிக்கையின்படி 95 சதவீதமான பதின்ம வயதினருக்கு ஸ்மார்ட்போன் அணுகல் உள்ளது. 8-12 வயதுக்குட்பட்ட 38 சதவீதமான குழந்தைகள் சொந்த ஸ்மார்ட்போன் வைத்திருக்கிறார்கள். 53சதவீதமான குழந்தைகள் ஏழு வயதிற்குள் அலைபேசிகளை வைத்திருக்கிறார்கள்.

இலங்கையில் 24.5சதவீதமான பாடசாலை மாணவர்கள் ஸ்மார்ட்போன்களுக்கு அடிமையாகியுள்ளதாக ஆய்வில் கண்டறியப்பட்டுள்ளது. 11-18 வயதுடைய இலங்கைக் குழந்தைகளில் 52.8 சதவீதமான டிஜிட்டல் சாதனங்கள் மற்றும் இணையத்தைப் பயன்படுத்துகின்றனர்.

சிறுவர்களின் அலைபேசிகள் பாவனையை அதிகரிக்கும் முக்கிய காரணங்களில் ஒன்று, உலகம் முழுவதும் பரவியுள்ள தொழில்நுட்ப அடிப்படையிலான சமூக வலைத்தளங்கள், மற்றும் ஆன்லைன் விளையாட்டுகள் என்பதாகும். 2024 ஆம் ஆண்டில் டிஜிட்டல் கேம்களை விளையாடும் குழந்தைகளின் சதவீதம் 74.0 ஆக இருக்கிறது.

பாஸ்டன் பல்கலைக்கழகத்தில் நடத்திய ஆய்வு ஒன்றின்படி, டிஜிட்டல் விளையாட்டுகள் சிறுவர்களின் தூய்மையான எண்ணங்களைத் திசைவிடும் ஒரு சாதனமாக இருப்பதாக கூறுகிறது.

மொழி மிகுந்த சமூக வலைத்தளங்கள், likes மற்றும் comments போன்ற எண்ணிக்கைகள் மூலம் சிறுவர்களின் மனநிலையை பாதிக்கின்றன. "மற்றவர்கள் என்னைப்பற்றி என்ன நினைக்கிறார்கள்?" என்ற கேள்வி சிறுவர்களின் உள்ளுணர்வில் பெரும் பங்கு வகிக்கிறது.

உதாரணமாக, Facebook, Instagram போன்றவைகளில் பதிந்த படங்களுக்கும், தகவல்களுக்கும் கிடைக்கும் பதில்கள் சிறுவர்களின் மனசாட்சியை மிகுந்து பாதிக்கின்றன. இதற்காக தினசரி நேரத்தை அலைபேசிகளில் செலவிடுவதில் அவர்கள் அதிக ஈடுபாடு காட்டுகின்றனர்.

அலைபேசிகளில் அதிக நேரம் செலவிடுவதால், சிறுவர்களின் உடல் மற்றும் மன ஆரோக்கியத்தில் பலவிதமான பாதிப்புகள் ஏற்படுகின்றன. அலைபேசிகளில் அதிக நேரம் செலவிடும் சிறுவர்கள், உடல் இயக்கத்திற்கு குறைவான நேரம் ஒதுக்குகிறார்கள்.

உடல் இயக்கம் குறையும்போது, உடல் எடை அதிகரிப்பு, தசைகள் சோர்வு போன்ற உடல் பிரச்சினைகள் எழுகின்றன. உலக சுகாதார அமைப்பின் (WHO) ஆய்வுகளின்படி, உடல் இயக்கம் குறைவால் சிறுவர்களுக்கு உடல் நோய் அபாயம் 20 சதவீதமாக அதிகரிக்கும் என தெரிவிக்கப்படுகிறது.

அலைபேசிகளில் அடிமையாக உள்ள சிறுவர்கள், படிப்பில் அதிகம் கவனம் செலுத்த முடியாமல் போகின்றனர். பாடங்களுக்கான ஆழ்ந்த கவனமும் குறைவாகும். மேற்கத்திய ஆய்வுகள், சிறுவர்கள் தினமும் மூன்றுக்கும் அதிகமான மணிநேரம் அலைபேசிகளில் செலவிடும் போது, அவர்களது கல்வித் திறனில் 15 சதவீத வீழ்ச்சியை சந்திக்கின்றனர் எனக் குறிப்பிடுகின்றன.

சமூக வலைதளங்களின் மீது சார்ந்திருப்பதால், சிறுவர்கள் likes, comments போன்றவற்றின் எண்ணிக்கையைக் குறித்து மன அழுத்தத்தை ஏற்படுத்திக்கொள்கிறார்கள். அதிக likes கிடைக்காத போது மனஅழுத்தம் மற்றும் தன்னம்பிக்கை குறைவு உண்டாகிறது. மிகுந்த நேரம் அலைபேசியில் செலவிடுவதால், சிறுவர்களின் தூக்க நேரம் குறைகிறது. இது அவர்களின் அறிவாற்றலையும், தினசரி செயல்பாடுகளையும் பாதிக்கும்.

சிறுவர்கள் ஆன்லைன் உலகின் வரம்பற்ற விஷயங்களை எதிர்கொள்ளும் போது, உண்மையான வாழ்க்கை மற்றும் ஆபத்தான சூழல்களை எப்படி நிதானமாகப் பதிலளிக்க வேண்டும் என்ற எண்ணம்கூட அவர்களுக்கு குறைவாகவே இருக்கும்.

இதனால் அவர்கள் சூழல்களை சீராக சமாளிக்க முடியாமல் தோல்வியடைகிறார்கள். இது அவர்களுக்கு மன அழுத்தத்தை ஏற்படுத்தும் முக்கிய காரணங்களில் ஒன்று.

சமூக வலைத்தளங்களில் அவர்களுக்கு கிடைக்கும் நேரடி அல்லது மறைமுகமான விமர்சனங்கள், likes, followers போன்றவற்றின் அடிப்படையில் அவர்களின் தன்னம்பிக்கை சீர்குலைகிறது.

உதாரணமாக, TikTok போன்ற சுறுசுறுப்பான சமூக வலைத்தளங்களில் அவர்கள் தங்களின் திறமைகளை வெளிப்படுத்த முயற்சிக்கிறார்கள்; ஆனால் அங்கே கிடைக்கும் விமர்சனங்கள் சில சமயங்களில் அவர்களைத் தனிமைப்படுத்தவும், தன்னம்பிக்கை குறைவையும் உருவாக்குகிறது.

"ஐந்தில் வளையாதது ஐம்பதில் வளையுமா?" என்ற பழமொழிக்கமைய இளம் மூங்கிலை வளைப்பது சுலபம். அது முதிர்ந்து விட்டால் வளையாது. சிறு வயதிலேயே மொபைல் போன் பற்றிய தெளிவினை சிறுவர்களின் மனதில் விதைக்க வேண்டும். மொபைல் போனின் தவறான பாவனையை குறைக்க, பெற்றோர்கள், ஆசிரியர்கள், மற்றும் சமூக நிறுவனங்கள் பல்வேறு முயற்சிகளை மேற்கொள்ளலாம்.

சிறுவர்களின் அலைபேசிகள் பயன்பாட்டில் கட்டுப்பாடுகளை நிர்ணயிக்க வேண்டும். ஒவ்வொரு நாளும் குறிப்பிட்ட நேரத்தில் மட்டுமே அலைபேசியில் நேரத்தை செலவிடுவதை உறுதி செய்ய வேண்டும். சிறுவர்களின் பொழுதுபோக்குகளை விளையாட்டுகள், வாசிப்பு, கலை மற்றும் கல்வி சார்ந்த செயல்களில் மாற்ற வேண்டும்.

உதாரணமாக, விளையாட்டுகளில் ஈடுபடுத்துவதன் மூலம் அவர்கள் உடல் ஆரோக்கியத்திலும், சமூக உறவிலும் பயனடைவார்கள். மனநிலை பாதிப்புக்கு உள்ளான சிறுவர்களுக்கு, உளவியல் ஆலோசனைகள் வழங்கப்பட வேண்டும். ஆரோக்கியமாக அலைபேசிகள் பாவனை செய்யும் முறைகள் அவர்களுக்கு கற்றுத்தர வேண்டும்.

தற்காலத்திலும் எதிர்காலத்திலும் சிறுவர்களின் முழுமையான வளர்ச்சிக்காக, அலைபேசிகள் பாவனை கட்டுப்பாட்டிற்குள் கொண்டு வர வேண்டியது மிகவும் அவசியமாகும்.



குஜராத்

# விபத்தில் 38 பேர் காயம்





குஜராத்தில் சொகுசு பஸ் உட்பட 3 வாகனங்கள் மோதி விபத்துக்குள்ளானதில் 38 பேர் காயமடைந்துள்ளனர்.

குஜராத்தின் அம்பாஜி நகரருகே, சனிக்கிழமை (9) இந்த விபத்து சம்பவித்துள்ளது.

சொகுசு பஸ் ஒன்றும் மற்றும் கார் உள்ளிட்ட 2 வாகனங்களும் ஒன்றுடன் ஒன்று மோதி இந்த விபத்து ஏற்பட்டுள்ளது.

இதன்போது, சொகுசு பஸ்ஸும் காரும் வீதியை விட்டு கவிழ்ந்து விபத்துக்குள்ளானது.

காயமடைந்தவர்கள், தந்தா அரச வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டனர். அவர்களில் அறுவர் மேலதிக சிகிச்சைக்காக பாலம்பூரில் உள்ள வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டுள்ளனர்.

கர்நாடகா

## கர்நாடகாவில் புகையிலைக்கு தடை

அரச ஊழியர்கள் உடல் நலம், பொதுமக்களின் ஆரோக்கியம் ஆகியவற்றின் நலன் கருதி, கர்நாடகவில் உள்ள அரச அலுவலகங்கள், அலுவலக வளாகங்களில் புகைப்பிடித்தல், புகையிலை பொருட்களை உபயோகித்தல் முற்றிலும் தடை செய்யப்பட்டுள்ளது.

இதேவேளை, அலுவலகங்களில் போதை தரக்கூடிய எந்தப் பொருளையும் உட்கொள்வதும் தடை செய்யப்பட்டுள்ளது

இதுதொடர்பான எச்சரிக்கை அறிவிப்பு பலகை, அலுவலகங்களில் பொருத்தமான இடங்களில் வைக்கப்பட வேண்டும் எனவும், இதை மீறினால் ஊழியர் மீது ஒழுங்கு நடவடிக்கை எடுக்கப்படும் என, கர்நாடக அரசாங்கம் தெரிவித்துள்ளது.



தமிழகம்

## அவதூறு வழக்கு: கஸ்தூரி தலைமறைவு?

தெலுங்கு பேசும் மக்கள் குறித்து அவதூறாக பேசிய வழக்கில் நடிகை கஸ்தூரிக்கு சம்மன் அனுப்பப்பட்ட நிலையில், அவர் தலைமறைவு ஆகியிருப்பதாக தகவல் வெளியாகியுள்ளது.

அண்மையில் சென்னையில் நடைபெற்ற நிகழ்ச்சி ஒன்றில் கலந்து கொண்டு பேசிய போது, தெலுங்கு பேசும் மக்கள் குறித்து சர்ச்சைக்குரிய வகையில், நடிகை கஸ்தூரி பேசியிருந்தார்.

இதற்காக அவருக்கு எதிராக தாக கல் செய்யப்பட்ட அவதூறு வழக்கில் நேரில் ஆஜராகுமாறு கஸ்தூரிக்கு பொலிஸார் சம்மன் அனுப்பியிருந்தனர். இந்த நிலையில், கஸ்தூரி



தலைமறைவானதாக தகவல் வெளியாகியுள்ளது.

சென்னையில் உள்ள வீட்டை பூட்டிவிட்டு கஸ்தூரி தப்பி சென்றதாகவும் அவரது அலைபேசி எண்ணும் செயலில் இல்லை எனவும் கூறப்படுகிறது.

இதையடுத்து, கஸ்தூரியை பொலிஸார் தீவிரமாக தேடி வருகின்றனர்.

அமெரிக்கா


## பைடன் – ட்ரம்ப் முதல் முறையாக சந்திப்பு

அமெரிக்கா ஜனாதிபதி தேர்தலில் வெற்றிபெற்ற டிரம்ப், அடுத்த ஆண்டு ஜனவரி 20ஆம் திகதி, வாஷிங்டனில் பதவியேற்கவுள்ளார்.

இந்நிலையில், ஜனாதிபதியாக தேர்ந்தெடுக்கப்பட்ட டிரம்புக்கு வாழ்த்து தெரிவித்த ஜனாதிபதி ஜோ பைடன், வெள்ளை மாளிகையில் வந்து சந்திக்குமாறும் அழைப்பு விடுத்திருந்தார்.

இந்நிலையில், அமெரிக்க ஜனாதிபதி ஜோ பைடனும், ஜனாதிபதியாக தேர்ந்தெடுக்கப்பட்டுள்ள டொனால்ட் டிரம்பும் வரும் புதன்கிழமை (13) சந்தித்துப் பேசவுள்ளனர் என, வெள்ளை மாளிகை தெரிவித்துள்ளது.

அமெரிக்க ஜனாதிபதியாக டிரம்ப் வெற்றி பெற்ற பிறகு ஜோ பைடனை சந்திப்பது இது முதல் முறையாகும். தேர்தலுக்குப் பிறகு, பதவியில் இருந்து



விலகும் ஜனாதிபதி மற்றும் பதவிக்கு வரவிருக்கும் ஜனாதிபதிக்கு இடையேயான இத்தகைய சந்திப்பு நடைபெறுவது அமெரிக்காவில் வழக்கமாகவுள்ளது.

இது அமெரிக்காவில் ஜனநாயகத்தின் கீழ் அமைதியான அதிகார பரிமாற்றத்தின் தொடக்கத்தைக் குறிக்கும்.

எனினும், கடந்த 2020இல் நடைபெற்ற ஜனாதிபதி தேர்தலில் டிரம்ப் தோல்வி அடைந்ததும், அவர் ஜோ பைடனுடன் வெள்ளை மாளிகையில் சந்திப்பை நடத்தவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

லெபனான்

## தொடரும் லெபனான் மீதான தாக்குதல்: 2 நாட்களில் 40 பேர் பலி

கடந்த 2 நாட்களில், லெபனான் மீது இஸ்ரேல் நடத்திய வான்வழித் தாக்குதல்களில் 2 குழந்தைகள் உட்பட குறைந்தது 40 பேர் கொல்லப்பட்டதாக, லெபனான் அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

லெபனான் தலைநகர் பெய்ரூட்டின் தெற்கு புறநகர் பகுதிகளை ஒரே இரவில் இஸ்ரேல் கடுமையாக குண்டுவீசி தாக்குதல் நடத்தியது.

கடந்த வெள்ளிக்கிழமையில்



(8) இருந்து, கடலோர நகரமான டயரில் குறைந்தது 7 பேர் கொல்லப்பட்டனர் என்று, லெபனான் சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது.

முன்னதாக இந்த நகரில் இருக்கும் பொதுமக்கள் வெளியேற வேண்டும் என்று இஸ்ரேலிய இராணுவம் உத்தரவிட்டு இருந்தது. எனினும், வெள்ளிக்கிழமை (8) தாக்குதல் குறித்து இஸ்ரேல் இராணுவம் சார்பில் எந்த உத்தரவும் வெளியிடப்படவில்லை.

உயிரிழந்தவர்களில் இரண்டு குழந்தைகள் அடங்குவதாக லெபனான் சார்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது. தாக்குதல் நடந்த பகுதிகளில் மீட்புப் பணிகள் நடைபெற்று வருகின்றன.

# நியூசிலாந்தை வென்றது இலங்கை

நியூசிலாந்துக்கெதிரான முதலாவது இருபதுக்கு 20 சர்வதேசப் போட்டியில் இலங்கை வென்றது.

இரண்டு போட்டிகள் கொண்ட இத்தொடரில், தம்புள்ளயில் சனிக்கிழமை (09) நடைபெற்ற இப்போட்டியின் நாணயச் சுழற்சியில் வென்ற நியூசிலாந்தின் அணித்தலைவர் மிற்செல் சான்ட்னெர் தமதணி முதலில் துடுப்பெடுத்தாடுமென அறிவித்தார்.

அந்தவகையில் முதலில் துடுப்பெடுத்தாடிய நியூசிலாந்து, டுனித் வெல்லாலாகே (3), நுவான் துஷார (2), மகேஷ் தீக்‌ஷன, வனிது ஹசரங்க (2), மதீஷ பத்திரணவிடம் (2) விக்கெட்டுகளைப் பறிகொடுத்து 19.3 ஓவர்களில் சகல விக்கெட்டுகளையும் இழந்து 135 ஓட்டங்களைப் பெற்றது. துடுப்பாட்டத்தில் ஸகாரி போக்கிஸ் ஆட்டமிழக்காமல் 27 (16), மிஷெல் பிறேஸ்வெல் 27 (24) ஓட்டங்களைப் பெற்றனர்.

பதிலுக்கு 136 ஓட்டங்களை வெற்றியிலக்காகக் கொண்டு துடுப்பெடுத்தாடிய இலங்கை, அணித்தலைவர் சரித் அசலங்கவின் ஆட்டமிழக்காத 35



(28), கமிந்து மென்டிஸின் 23 (16), குசல் பெரேராவின் 23 (17), வனிது ஹசரங்கவின் 22 (23), பதும் நிஸங்கவின் 19 (14), டுனித் வெல்லலாகே ஆட்டமிழக்காத 11 (07) 19 ஓவர்களில் 6 விக்கெட்டுகளை இழந்த நிலையில் வெற்றியிலக்கையடைந்தது. பந்துவீச்சில், போக்கிஸ் 3, கிளென் பிலிப்ஸ், மிற்செல் சான்ட்னெர், மிஷெல் பிறேஸ்வெல் ஆகியோர் தலா ஒவ்வொரு விக்கெட்டைக் கைப்பற்றினர்.

## ஆப்கானிஸ்தானை வீழ்த்திய பங்களாதேஷ்

ஆப்கானிஸ்தானுக்கெதிரான மூன்று போட்டிகள் கொண்ட ஒருநாள் சர்வதேசப் போட்டித் தொடரில், ஐக்கிய அரபு அமீரகத்தின் ஷாஜாவில் சனிக்கிழமை (09) நடைபெற்ற இரண்டாவது போட்டியில் பங்களாதேஷ் வென்றது.

ஸ்கோர் விவரம்:

நாணயச் சுழற்சி: பங்களாதேஷ்

பங்களாதேஷ்: 252/7 (50 ஓவ. ) (துடுப்பாட்டம்: நஜ்முல் ஹொஸைன் ஷன்டோ 76 (119), ஜாகிர் அலி ஆ.இ 37 (27), செளமியா சர்கார் 35 (49), நசும் நஹ்மட் 25 (24) ஓட்டங்கள். பந்துவீச்சு: நங்கெயலியா கரோட்டே 3/28, ரஷீட் கான் 2/32, அல்லாஹ் மொஹமட் கஸன்ஃபார் 2/35)

ஆப்கானிஸ்தான்: 184/10 (43.3 ஓவ. ) (துடுப்பாட்டம்: ரஹ்மத் ஷா 52 (76), செதிகுல்லாஹ் அடல் 39 (51) ஓட்டங்கள். பந்துவீச்சு: நசும் அஹ்மட் 3/28, மெஹிடி ஹஸன் மிராஸ் 2/37, முஸ்தபிசூர் ரஹ்மான் 2/37, தஸ்கின் அஹ்மட் 1/29, ஷொரிஃபுல் இஸ்லாம் 1/45)

போட்டியின் நாயகன்: நஜ்முல் ஹொஸைன் ஷன்டோ

இரண்டு அணிகளுக்குமிடையிலான தீர்மானமிக்க மூன்றாவது போட்டியானது இன்று பிற்பகல் 3.30 மணிக்கு நடைபெறவுள்ளது.



## பிறைட்டனிடம் தோற்ற மன்செஸ்டர் சிற்றி

இங்கிலாந்து கால்பந்தாட்டக் கழகங்களுக்கிடையிலான பிறீமியர் லீக் தொடரில், பிறைட்டன் அன்ட் ஹொவ் அல்பியனின் மைதானத்தில் சனிக்கிழமை (09) நடைபெற்ற அவ்வணியுடனான போட்டியில் 1-2 என்ற கோல் கணக்கில் நடப்புச் சம்பியன்களான மன்செஸ்டர் சிற்றி தோற்றது.

சிற்றி சார்பாகப் பெறப்பட்ட கோலை எர்லிங் ஹலான்ட் பெற்றதுடன், பிறைட்டன் சார்பாக ஜோவா பெட்ரோ, மற் ஒறைலி ஆகியோர் தலா ஒவ்வொரு கோலைப் பெற்றனர்.



## முதலாவது போட்டியில் இங்கிலாந்து வெற்றி

மேற்கிந்தியத் தீவுகளுக்கெதிரான முதலாவது இருபதுக்கு 20 சர்வதேசப் போட்டியில் இங்கிலாந்து வென்றது.

ஐந்து போட்டிகள் கொண்ட இத்தொடரில், பார்படோஸில் ஞாயிற்றுக்கிழமை (10) நடைபெற்ற இப்போட்டியின் நாணயச் சுழற்சியில் வென்ற இங்கிலாந்தின் அணித்தலைவர் ஜொஸ் பட்லர் தமதணி முதலில் களத்தடுப்பிலீடுபடுமென அறிவித்தார்.

அந்தவகையில் முதலில் துடுப்பெடுத்தாடிய மேற்கிந்தியத் தீவுகள், சஹிப் மஹ்மூட் (4), அடில் ரஷீட்



(3), லியம் லிவிங்ஸ்டோன், ஜேமி ஒவெர்ட்டனிடம் விக்கெட்டுகளைப் பறிகொடுத்தபோதும் நிக்கலஸ் பூரானின் 38 (29), றொமாரியோ ஷெப்பர்ட்டின் ஆட்டமிழக்காத 35 (22), குடகேஷ் மோட்டியின் 33 (14), அன்ட்ரே ரஸலின் 30 (17) ஓட்டங்களோடு 20 ஓவர்களில் 9 விக்கெட்டுகளை இழந்து 182 ஓட்டங்களைப் பெற்றது.

பதிலுக்கு 183 ஓட்டங்களை வெற்றியிலக்காகக் கொண்டு துடுப்பெடுத்தாடிய இங்கிலாந்து, பில் ஸோல்டின் ஆட்டமிழக்காத 103 (54), ஜேக்கப் பெத்தெல்லின் ஆட்டமிழக்காத 58 (36) ஓட்டங்களோடு 16.5 ஓவர்களில் 2 விக்கெட்டுகளை இழந்த நிலையில் வெற்றியிலக்கையடைந்தது.

இப்போட்டியின் நாயகனாக ஸோல்ட் தெரிவானார்.

விஜய நியூஸ்பேப்பர்ஸ் லிமிட்டெட்டினால் திங்கட்கிழமை 11, நவம்பர் 2024, இல. 08, ஹூணுபிட்டிய குறுக்கு வீதி, கொழும்பு - 02 இல் வடிவமைக்கப்பட்டு, இந்த மின்னிதழ் வெளியிடப்பட்டது.